When only
The best is
Good Enough

Buy
Solide Pumps

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூ2/50

தரமானதே சிறந்தது
என்றால்

சொலிட்
பம்பையே வாங்குங்கள்

சுடர்: 4 சுக்கில ஆண்டு சித்திரை மீ 25 உ. திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை 02 (08 - 05 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-129

# தமிழ்ப் பகுதிகளில் இயல்புநிலை;
# புலிகளின் முதல் இலக்கு அதுவே

### மாநாடு

நாளை செவ்வாய்க்கிழமையும், புதன்கிழமையும் நாட்டில் உள்ள சகல அரச அதிபர்களுக்குமான மாநாடு ஒன்று கொழும்பில் நடைபெற உள்ளது. (ஓ 13)

### சோதனை

நேற்றுக் காலையிலிருந்து காங்கேசன்துறை வீதி, குளப்பிட்டிச்சந்தியில் உள்ள முகாம் முன்பாக வந்த வாகனங்கள் சோதனையிடப்பட்டன பிரயாணிகள் பஸ்சில் இருந்து இறக்கப்பட்டு சோதிக்கப்பட்டனர். (ஓ - 3)

## பின்னரே அரசியல் தீர்வு குறித்து ஆலோசிக்கப்படும் என்று தகவல்

கொழும்பு, மே 8

**தமிழ்ப்பகுதிகளில் சமாதானமும், இயல்பு நிலையும் வரவேண்டும். அவற்றை உண்டாக்குவதே இப்போதைய பேச்சுக்களில், தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் இலக்காக இருக்கிறது.**

**அதன் பின்னரே, அரசியல் தீர்வு காணும் வழி ஆராயப்படும்**

**இவ்வாறு இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளுடன், பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தூதுக்குழு வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.**

பிரஸ்தாப வட்டாரங்கள் தமது நிலைப்பாட்டைப் பின்வருமாறு தெரிவித்தன:-

இப்போது இலங்கை அரசுடன் நடத்தப்படும் பேச்சுக்கள் உடனடியாக அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கானது அல்ல.

தமிழ்ப் பகுதிகளில் முதலில் தற்காலிகமாக சமாதான, இயல்புநிலை வரவேண்டும்.

அதன்பின்னரே எத்தகைய அரசியல் தீர்வு சாத்தியமானது என்பது குறித்து நாம் ஆற அமர ஆலோசித்து இறுதி முடிவு எடுக்க முடியும்.

**மக்களின் துயரங்கள்**

எமது மக்கள் இராணுவ நடவடிக்கைகளினால் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகிறார்கள். இவை பற்றித்தான் நாம் அரசுக்கு விளக்கமாகக் கூறிவருகிறோம்.

எமது மக்கள் அனுபவிக்கும் சித்திரவதைகள் உலக அரங்கில் இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன. இந்த விடயங்களையும் பேச்சுக்களின்போது எடுத்துக் கூறியுள்ளோம்.

கெடுபிடி நிலைமாறி சமாதான, சகஜநிலை இயல்புநிலை தோன்றத் தடையாக இருக்கும் சக்திகள், காரணிகளை வெளியேற்ற வேண்டும். அவற்றை வெளியேற்றி சகஜ வாழ்வு ஏற்படுத்துவது குறித்து இப்போது பேசுகிறோம்.

ஆகவே நிரந்தரமான அரசியல் தீர்வு உடனடியாக வந்துவிடும் என்று யாரும் நம்ப முடியாது.

**பின்னரே......**

இந்தப் பேச்சின்மூலம் அத்தகைய சமாதான, சகஜநிலை ஏற்பட வாய்ப்பு உருவாகுமானால், அதனையடுத்தே அரசி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

08—05—1989
திங்கட்கிழமை

சுபநேரம்;
11.55 முதல் 01.25 வரை
ராகுகாலம்:
07.25 முதல் 08.55 வரை
சதுர்த்தி விரதம்

## மயிலிட்டி ஆஸ்பத்திரிக்கும் பிரிட்டிஷ் குழு செல்லும்

யாழ்ப்பாணம், மே 8

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக் கழகம் ஆகியவற்றின் தேவைகளை அறிந்து உதவி வழங்கும் நடவடிக்கைகளைக் கவனிக்க பிரிட்டிஸ் தூதரகத்தைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் குழு இங்கு வந்துள்ளது.

பிரிட்டிஷ் தூதுவராலயத்தைச் சேர்ந்த இரண்டாவது செயலாளர் திரு. மைக்கல் பூட்டும் சுகாதார ஆலோசகர் மாகிறெட் மக் ஆதரும், சிரேஷ்ட சுகாதார தகவல் சேகரிப்பு ஆலோசகர் செல்வி கில்லறி வோகனும் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

இவர்கள் இன்று (திங்கள்) யாழ்.போதனாவைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்வையிடுவார்கள். அத்துடன் அங்கு நிலவும் பற்றாக் குறைகளை அறிவதோடு யாழ் போதனா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சரசாலைப் பகுதியில் நேற்று மோதல் சம்பவம்

நேற்று சரசாலைப் பகுதியில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

ரோந்தில் ஈடுபட்டிருந்த படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் அப்போதே மோதல் ஏற்பட்டு அமைதிப்படை ஜவான் ஒருவர் கொலையுண்டதாகவும் சொல்லப்பட்டது, எனினும் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

கிரனேட் வீச்சுச் சம்பவத்தை அடுத்தே மோதல் ஆரம்பித்ததாகக் கூறப்பட்டது. [ஓ-9]

## துன்னாலையில் இரு வீடுகளில் ஆயுதக் கோஷ்டி கொள்ளை!

வல்வெட்டித்துறை, மே 8

கடந்த வெள்ளிக்கிழமை இரவு துன்னாலை தெற்குப் பகுதியிலுள்ள இரு வீடுகளில் ஆயுதக் கோஷ்டி ஒன்று கொள்ளைகளை நடத்தியது.

ஆயுதங்களுடன் சென்ற அந்தக் கோஷ்டியினர் தமிழிலும், வீடுகளில் இருந்தவர்களுக்குப் புரியாத மொழியிலும் பேசியதாகத் தெரிவிக்கப்பட்டது.

முதலில் எஸ். சோமசுந்தரம் என்பவரது வீட்டிற்குக் கொள்ளையர்கள் சென்றனர். அங்கிருந்த ஆண்களை வெளியேற்றினர்.

அதன் பின்னர் பெண்கள் அணிந்திருந்த நகைகள் பறிக்கப்பட்டன. அவற்றோடுபணம் மற்றும் பல ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான பொருள்கள் என்பனவும் அபகரிக்கப்பட்டன.

அடுத்ததாக மற்றொரு வீட்டிற்குள்ளும் கொள்ளையர்கள் புகுந்தனர். வீட்டுக்காரரான ஓய்வுபெற்ற அரச ஊழியரை கொள்ளையர்களில் ஒருவன் நெற்றியில் தாக்கினான் என்றும் கூறப்பட்டது.

பின்னர் அவரது மனைவி அணிந்திருந்த பெறுமதிமிக்க தங்கச் சங்கிலியை அவர்கள் அபகரித்துச் சென்றனர். (ஓ-160)

### 1980 வேலைநிறுத்தக்காரருக்கு

## மீண்டும் வேலைவழங்குவதை ஆராய அமைச்சரவையின் விசேட கூட்டம் இன்று

கொழும்பு, மே 8

அமைச்சரவையின் விசேட கூட்டம் ஒன்று இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் நடைபெறவிருக்கிறது,

1980 ஜூலை வேலைநிறுத்தத்தில் பங்குபற்றியதால் வேலை இழந்த அரச ஊழியருக்கு மீண்டும் வேலை வழங்குவது தொடர்பாக ஆராய்வதற்காகவே இந்தக் கூட்டம் நடத்தப்பட உள்ளது.

இதனிடையில் வேலை இழந்த ஊழியர்களுக்கு பொது நிர்வாக அமைச்சு கேள்விக்கொத்து ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

வேலையிழந்த அரசஊழியர் சம்பந்தமான புள்ளி விபரங்களைச் சேகரிக்கவே இந்த ஏற்பாடு. [ஓ-எ]

## கண்டியிலுள்ள காடுகளில் தீவிர தேடுதல் வேட்டை!

கொழும்பு, மே 8

கண்டியில் உள்ள ஹந்தெனை காடுகளை கடந்த வெள்ளிக்கிழமை இராணுவத்தினரும், பொலீஸாரும் கூட்டாக முற்றுகையிட்டுத் தேடுதல் நடத்தினர்.

அப்போது காடுகளில் பதுங்கியிருந்து செயற்பட்டதாகக் கருதப்படும் தீவிரவாதிகள் கோஷ்டி ஒன்றை அவர்கள் கைது செய்தனர்.

இக்கோஷ்டியில் 4 யுவதிகள் உட்பட 18 பேர் இருந்தனர்

கண்டியில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்களுக்கு இவர்கள்தான்காரணம் என்று நம்பப்படுகிறது. (ஓ-எ)

## உயர் தலைவர்களைச் சந்திப்பதற்காக தூதுக்குழுவினர் இடையில் செல்லலாம்

கொழும்பு, மே 8

தற்போது கொழும்பில் பேச்சுக்களை நடத்திவரும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தூதுக்குழுவினர் தமது உயர் தலைவர்களிடம் ஆலோசனை பெறுவதற்காக இடையில் திரும்பிச் செல்லக்கூடும்.

விடுதலைப்புலிகள் இயக்க வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

தற்போதைய நிலையில் பேச்சுக்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் கலந்து கொள்ளும் வாய்ப்பு உடனடியாக இல்லை என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இலங்கை அரசு அதிகாரிகள் மட்டத்தில் நடத்தப்பட்டு வரும் பேச்சுக்கள் அமைச்சர் தரத்தில் புதன் அல்லது வியாழன் ஆரம்பமாகலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

அப்போது பங்குபற்றும் அமைச்சர் குழுவில் இடம் பெறும் அமைச்சர்களின் பெயர்கள் முதலில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தூதுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிகிறது.

**விரும்பாத அமைச்சர்கள்**

விடுதலைப்புலிகள் இயக்கம் விரும்பாத அமைச்சர்கள் அமைச்சர் குழுவில் இடம் பெற மாட்டார்கள் என்று அரசுடன் பேச்சு நடத்தும் விடுதலைப் புலிகள் இயக்க வட்டாரங்கள் தெரிவித்தன,

இந்த அமைச்சர் குழுவில் அமைச்சர்களான காமினி திஸநாயக்கா, லலித் அத்துலத்முதலி இடம்பெறுவதை விடுதலைப்புலிகள் இயக்க வட்டாரங்கள் விரும்பவில்லை என்றும் தெரிகிறது: (அ-1)

## கொழும்பில் தமிழ்த்தின விழா இன்று; இங்கு தகவல் வந்தது வெள்ளியன்றே!

யாழ்ப்பாணம், மே 8

**தமிழ்த் தின விழா இன்று கொழும்பில் நடக்கிறது. ஆனால் தமிழ்த்தின விழா சம்பந்தமான போட்டிகளை நடத்துமாறு யாழ்ப்பாணத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னரே அறிவுறுத்தல்கள் கிடைத்தன!**

தமிழ்த் தின விழா இன்று நடைபெறும் என்ற தகவல் கூட சனிக்கிழமையே கொழும்பில் உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டது!!

தமிழ்த் தின விழாவை முன்னிட்டு கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விழாக்கள், போட்டிகளுக்கான அறிவித்தல் கடந்த வெள்ளிக்கிழமை இங்கு கிடைத்ததினால் அறிவுறுத்தலில் உள்ளவாறு இன்று பிரஸ்தாப போட்டிகள், விழாக்களை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விழாக்கள் போட்டிகள் என்பன அடுத்து வரும் வாரங்களிலேயே நடத்தப்படும்.

தமிழ்த் தின விழாவை முன்னிட்டு வட்டார, மாவட்ட, அகில இலங்கை ரீதியில் பேச்சு, கட்டுரைப் போட்டிகள் நடத்தப் பணிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் தோறும் விழாக்களையும் நடத்த பணிக்கப்பட்டுள்ளது.

''மிகக் குறுகிய கால அறிவித்தலின் காரணமாக குறித்த திகதியில் பிரஸ்தாப விழாக்களையும் போட்டிகளையும் ஏற்பாடு செய்ய முடியாமல் போய்விட்டது. ஆனால் எவ்வாறு எப்போது நடத்துவது என்ற விபரங்களை இன்று யாழ். கல்வித் திணைக்கள அலுவலகத்தில நடைபெற

(6ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



எங்களுக்கு எண்டு ஒதுக்கின ஒரு விழாவையே சரியான முறையிலை கொண்டாட முடியாமல் இருக்குது பாத்தியளே!

## புதிய பஸ்களுக்கு 'ஓய்வு' வழங்கப்படுமா?

வட பிராந்திய போக்குவரத்துச் சபை, புதிய இந்திய பஸ்களை சேவையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் என அறியவருகிறது.

அடுத்தடுத்து புதிய பஸ்கள் சில ரிக்கிரையாக்கப்பட்டதை அடுத்தே இப்படி ஆலோசிக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

ஏற்கனவே பருத்தித்துறை சாலை புதிய பஸ்களின் சேவையை இடை நிறுத்தி வைத்துள்ளது தெரிந்ததே.

ஏனைய வட பகுதி சாலைகளும் புதிய பஸ்களை - குறிப்பாக இந்திய அரசினால் வழங்கப்பட்ட பஸ்களை சேவையில் ஈடுபடுத்த தயக்கம் காட்டி வருகின்றனவாம்-

இதேவேளை அண்மைக் கால பஸ் தீ வைப்புச் சம்பவங்களினால் வ. பி. போ. சபைக்கு சுமார் 25 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (ஓ-9)

### குடாநாட்டை விட்டு

## ஸ்ரீலங்கா இராணுவ அணி நேற்றுப் புறப்பட்டது

யாழ்ப்பாணம், மே 8

ஸ்ரீலங்கா இராணுவ அணி ஒன்று நேற்று குடாநாட்டை விட்டு தரைமார்க்கமாக வெளியேறியது.

குடா நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள முகாம்களிலிருந்தும் ஆனையிறவுக்குச் சென்ற இராணுவத்தினர் அங்கிருந்து தென்பகுதி நோக்கிப் புறப்பட்டனர்.

கவசவாகனங்கள், பீரங்கிகள் உட்படப் பல இராணுவ வாகனங்களும் சென்றன. அமைதிப் படையினர் பாதுகாப்பு வழங்கினர்.

இந்த அணியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் பொலீஸாரும் அடங்கி இருந்தனர்.

இராணுவ அணிக்கு விமானப் படை ஹெலிக்கொப்டர்கள் இடைக்கிடையே பாதுகாப்பு வழங்கின. (ஓ-9)

### செய்திச் சரம்

### சிப்பாயின் தலை துண்டிப்பு

கொழும்பு. மே 8

அம்பாந்தோட்டைக்கு விடுமுறையில் வந்த சிப்பாய் ஒருவரை தீவிரவாதிகள் கொன்றனர்.

தலை துண்டிக்கப்பட்டே அவர் கொலை செய்யப்பட்டார் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-எ)

### முகமூடியுடன் நேற்று ரோந்து

வல்வெட்டித்துறை, மே 8

நேற்று பருத்தித்துறை பிரதான வீதிகளில் படையினர் 'முகமூடி' ஒருவருடன் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் இப்பகுதி மக்கள் பீதியுற்று. தமது நடமாட்டங்களைக் குறைத்துக் கொண்டனர்.

இதேவேளை தனியார் பஸ்கள் நேற்று முழுவதும் கிராமக் கோடு மந்திகை போன்ற பகுதிகளில் இருந்தே தமது சேவைகளை ஆரம்பித்தன. (ஓ-160)

### தாக்குதல்

கண்டி மாவட்ட எம். பி. திஸ்ஸ அத்தநாயக்காவின் ஹஸ்ஸலை வாசஸ்தலத்தின் மீது கடந்த வெள்ளி இரவு தீவிரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். (ஓ-எ)

### பாடசாலைகளில் மீண்டும் இருநேர வகுப்பு?

பாடசாலைகளில் மீண்டும் இரண்டு நேர வகுப்புக்களை நடத்துவது பற்றி கல்வி அமைச்சுஆராய்ந்துவருகிறது.

மதிய உணவுத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் பாடசாலைகளில் இரண்டு நேர வகுப்புக்கள் நடத்தும் திட்டத்துக்குப் புத்துயிர் கொடுப்பது நல்லது என்ற அபிப்பிராயம் கல்வி அமைச்சு வட்டாரங்களில் நிலவுகிறது. (ஓ-எ)

### 18 பயணிகள் உயிரிழப்பு

சண்டிகார் மே 8

பஞ்சாபில் நேற்று நடந்த பஸ் விபத்து ஒன்றில் 18 பயணிகள் இறந்தனர்; 35 பேர் காயமடைந்தனர்.

இறந்தவர்களில் 6 பேர் பெண்கள் 2 பேர் குழந்தைகள். (ஓ-எ)

### வீரத்திலகமிட்டு வரவேற்பு

சென்னை, மே 8

இலங்கையிலிருந்து அமைதிப் படை அணி ஒன்று நேற்று இந்தியா திரும்பிய போது அங்கு அவர்களுக்கு வீரத்திலகமிட்டு, மலர் தூவி வரவேற்பு அளிக்கப்பட்டது. சென்னைத் துறைமுகத்தில் நாதஸ்வர கானமும் இனிமை சேர்த்தது.

சென்னை மக்கள் மன்றத்தின் ஆதரவிலேயே இந்த வரவேற்பு அளிக்கப்பட்டது.

அமைதிப்படையினரை வர

[6ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கைதடியில் மானிப்பாய் வீதிக்கு வடக்குப் பக்கத்தில் தோட்டமும், வெறும் நிலமும் அடங்கிய 13½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பா. செல்வரத்தினம், 490, கே.கே.எஸ் வீதி, வண்ணார்பண்ணை. [376)

### வான் விற்பனைக்கு

30 சிறி தொடர் இலக்கம் உடைய ELF 250 வான் உடனே விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க செரமிக் சேல்ஸ் சென்ரர், 116, K.K.S றோட், சுன்னாகம். (பழைய பொலீஸ் நிலையம் முன்பாக) [C 2502]

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(DEKALB பிறவுண் சேவல் குஞ்சு 50 க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை ரூபா 3-50 சிறு அட்வான்ஸ் கட்டி பதிவு செய்யலாம் இல 9, கந்தையா லேன் சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) (10820]

Hyline வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள் 9ஆம்திகதி செவ்வாயும், Golden Comet பிறவுண் பேடு சேவற் குஞ்சுகள் 10ஆம் திகதி புதனும், Hybro புரொயிலர் குஞ்சுகள் Hisex பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், 11ஆம்திகதி வியாழனும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (371)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும். சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும். தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும். நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/2433]

### சஞ்சிகை

குமுதம், ஆனந்தவிகடன், கல்கி, யூனியர்விகடன், யூனியபோஸ்ட், கல்கண்டு மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு சஞ்சிகைகளுக்கான சந்தா ஏற்றுக்கொள்ளப்படும். உங்கள் சஞ்சிகைகளின் சந்தாதாராகி தட்டுப்பாட்டைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். வியாபாரிகளுக்குக் கழிவுடன் வழங்கப்படும். விபரங்களுக்கு: பூபாலசிங்கம் புத்தகசாலை (சஞ்சிகைப் பகுதி), யாழ்ப்பாணம். [சி/2507]

### ADVANCED ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம் 20-5-89 சனி, ஞாயிறு நாட்களில் நேரம் பகல் 10.30 - 12.00 மணி. S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். [10837]

### தேவை

உருக்கு தளபாட அனுபவம் உள்ள வேலை ஆட்கள் தேவை. (Steel Cupboard Tables Chairs etc 9.5.89 காலை 9 மணிக்கு நேரில் வரவும். ஜெனுட் ரெடெஸ், K.K.S. றோட், இணுவில். (C/2517)

எலெக்ரிக்கல் குளிர்சாதனப் பெட்டிகள் திருத்தும் வேலை பழக ஆர்வமுள்ளவர்கள் தேவை. ஸ்பிறே பெயின்ரிங் வேலை ஓரளவு தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. வேலை நேரம் காலை 8.00 தொடக்கம் 6.00 மணி, நேரில் வரவும். 'OMEGA' [ஈழநாட்டிற்கு எதிரில்] யாழ்ப்பாணம் [378]

### சைவ உணவகத்தில் ஆட்கள் தேவை

ரீ மேக்கர், சப்ளையர், சிப்பந்திகள் உடன் தேவை. தங்குமிட வசதி உண்டு. உடன் நேரில் தொடர்பு கொள்ளவும். விலாசம் திரு. L. பக்கீர்சாமி, 375, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [10856]

### கோழிக்குஞ்சு விநியோகம்

(Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், கறுப்பு வரிச் சேவல் குஞ்சுகள் (Cobb) புரொயிலர்க் குஞ்சுகள் [9-5-89] செவ்வாய்க்கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். முன்கூட்டியேபதிவுசெய்க. இல 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) [10775]

### தவறிவிட்டது

அப்பையா முத்துலிங்கம் ஆகிய நான் 422771778V இலக்கமுடைய அடையாள அட்டையை 751 இலக்க பஸ்ஸில் தவறவிட்டு விட்டேன். கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். [381]

நடராசா விஜயகலிங்கம் ஆகிய எனது அடையாள அட்டை இல. 383630819V கல்வியங்காடு கலைமகள் வீதிக்கும், சட்டநாதர் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [10851]

### பைண்டிங்

உங்களது புத்தகங்கள் மற்றும் பாதுகாப்பான நூல்கள் அனைத்தும் நல்ல முறையில் [பைண்டிங்] கட்டிக் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும், பூபாலசிங்கம் புத்தகசாலை [புத்தகக் களஞ்சியம்], மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். சி/2511]

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### செல்வன் யக்ஷன்

யாழ். சென் பற்றிக்ஸ் வீதியைச் சேர்ந்த வோல்டர் - எலிசா தம்பதிகளின் செல்வப் புதல்வன் யக்ஷன் என்பவர் இன்று (8 - 5 - 89) தனது முதலாவது பிறந்த தினத்தை மிகக் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அம்மா, அப்பா, அம்மம்மாச்சிஸ்ரர், அம்மம்மா, தொட்டம்மா, தொட்டப்பா குடும்பத்தினர், அன்ரிமார், ஜோன்சன் மாமா, றூபன்மாமா, லெனின் மாமா, டென்மார்க் சித்தப்பா குடும்பத்தினர், ஓமான் சித்தப்பா, சவூதி பெரியப்பா குடும்பத்தினர், சுன்னாகம் பெரியய்யா குடும்பத்தினர், கிளிநொச்சி சங்கர் அப்பா குடும்பத்தினர், கிளிநொச்சி பெரியம்மா பெரியப்பா, அத்தை குடும்பத்தினர், றொகான் மச்சான், மச்சாள், அக்காமார், அண்ணன்மார் மற்றும் உறவினர், நண்பர்கள், அனைவரும் அன்னையின் அருள் வேண்டி பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். (கி/2461)


# வவுனியாச் சம்பவங்களில்
# இருவர் மரணம், அறுவர் காயம்

வவுனியா மே 8

கடந்த செவ்வாய் இரவு வவுனியா நகரில் இடம்பெற்ற மோதலைத் தொடர்ந்து வவுனியா ரயில் நிலைய வீதியில் அமைந்துள்ள சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இரவு தங்கியிருந்த 45வயதுடைய ஒருவரும் 12வயதுடைய சிறுமி ஒருத்தியும் பலியாகினர். இரண்டு பெண்கள் உட்பட ஆறுபேர் காயமடைந்து வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

சண்டிலிப்பாய் மேற்கைச் சேர்ந்த சின்னத்துரை கணேசமூர்த்தி (புகையிலை வியாபாரி கிளிநொச்சியைச் சேர்ந்த காலாவதி (12வயது) ஆகிய இருவருமே பலியானவர்களவர்.

காயமடைந்தவர்களின் விவரம்: ஆர். சுந்தரலிங்கம் [21 வயது) எஸ். கோபாலப்பிள்ளை [55) வயது), எம். முருகையா [34வயது] எஸ், ஜெயராஜ் [30 வயது), லெட்சுமி (12 வயது], ராணி 27வயது இறந்தவர்களின் பிரேத பரிசோதனையை வவுனியா, மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் வே. ஸ்ரீராஜேஸ்வரன் நடத்தி அறிக்கை சமர்ப்பித்தார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் எஸ். கே. பாலசிங்கம் விசாரணைகளின் பின் கொலை எனத் தீர்ப்பளித்தார்-சடலங்கள் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டன. (இ-164)


# ★ சவூதி ★
## உடனடியான வேலைவாய்ப்பு

| | Salary |
|---|---|
| Heavy Duty Driver | 700 |
| Store Handler | 300 |
| Road Maintenance Technician | 600 |
| General Work Driver | 650 |
| Road Maintenance Labourer | 300 |
| Cleaning Labourer | 300 |
| Digging and Ground Specialist | 650 |
| Digging Labourer | 375 |
| Building Construction Foreman | 850 |
| Carpenter | 600 |
| Carpenter Helper | 350 |
| Furniture Painter | 600 |
| Furniture Painter Helper | 300 |
| Electrical Appliance Electrician (Low voltage) | 750 |
| Electrician | 850 |
| Power Plant Operator | 700 |
| **Support Section:** | |
| Heavy Duty Driver | 750 |
| Cook | 750 |
| Cook Helper | 400 |
| G. P. Doctor | 2500 |
| Male Nurse | 1200 |
| **Sports Hall:** | |
| Cleaning Labourer (Sports equipment) | 300 |
| Cleaning Supervisor | 700 |
| Cleaner | 300 |
| Swimming Pool Cleaner | 300 |
| Swimming Pool Operator | 400 |
| Electrician Sport Arena | 700 |
| Plumber Sport Arena | 650 |
| Painting Labourer | 350 |
| Carpenter | 650 |
| Cleaner (General) | 300 |
| Sewage Treatment Plant Operator | 700 |
| Pest Control Foreman | 800 |
| Pest Control Technician | 600 |
| Pest Control Helper | 400 |
| Facilities Foreman (Civil Engineer) | 1500 |
| Facilities Foreman (Electrical Engineer) | 1500 |
| Facilities Foreman (Machanical Engineer) | 2000 |
| Facilities Foreman (Communication Engr.) | 2000 |
| Typist | 700 |
| Telephone Technician | 850 |
| Telephone and Line Installatiou Technician | 750 |
| Telephone Operator | 700 |
| Computer Operator | 800 |
| Cleaning Supervisor | 700 |
| **Special Requirement:** | |
| Panel Beater / Glass Fitter | 750 |
| Auto Painter | 750 |
| Auto Battery and Electrical System Tech. | 700 |
| Radiator Technician | 700 |
| Wheel Balance Technician | 650 |
| Tyre Repair Technician | 650 |
| **Fire Department:** | |
| Warning System Operator | 700 |
| Driver Fire Trucks etc. | 800 |
| Fire Dept. Reports and Record Keeper | 700 |
| Assistant Technician Fire Protection System | 600 |
| **General Services:** | |
| Cleaner (Aircraft) | 300 |
| Loading, Unloading Labourer | 350 |
| Office Boy | 300 |

S.O.M.C

● Age: 21 தொடக்கம் 49 வரை

## T. V. TRAVELS

**Brown Road, KOKUVIL**

[C-2533]


### தென்பகுதியில் உள்ள
# பாடசாலைகளில் இன்றுமுதல் பாதுகாப்பு பலப்படுத்தப்படும்

கொழும்பு, மே 8

நாட்டின் தென்பகுதிப் பாடசாலைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் இன்றுதிங்கட்கிழமை முதல் பலப்படுத்தப்படவுள்ளன.

துணைக்கல்வி அமைச்சர் கேர்ணல் வி. எஸ். குடலிகம இதனைத் தெரிவித்தார்.

பாடசாலைகளுக்குப் பொலீஸார் அனுப்பப்பட மாட்டார்கள். ஆனால் அதிபர்களின் ஆலோசனையுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கும் என்று கேர்ணல் குடலிகம மேலும் சொன்னார். (ஓ-எ)


## 125 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### துரைச்சாமி மகாலிங்கம்

[ஜேர்மனி]

(முன்னாள் சிவா இன்டஸ்றீஸ் பங்காளர், கொழும்பு)

மண்ணுலகில்: 14. 08. 1949 விண்ணுலகில்: 04. 01. 1989

ஆலமரமாய் நின்று அனைவருக்கும் நிழல் தந்தீர். பாசமாய் நின்று பரிவுடனே ஆதரித்தீர் காரிருள் ஒளி தந்தீர், கடமை முடித்தீர், காலமெல்லாம் உம் நினைவுடனே காத்திருப்போம். போற்றிடுவோம் உமது புகழை நீர் சென்ற இடம் எதுவே சிந்தித்துப் பார்க்க முடியவில்லை ஐயா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குறிப்பு:- நாளை 08-05-1989 திங்கட்கிழமை அந்தியேட்டியும், 10-05-1989 புதன்கிழமை வீட்டுக்கிரியையும் நடைபெறும். எனவே வீட்டுக்கிரியையிலும் மதிய போசனத்திலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
தாய், தகப்பன், மாமன், மாமி,
சகோதரர்கள்.

(447)

## ஸ்தோத்திர ஆராதனை

''கர்த்தருக்குள் மரிப்பவர்கள் பாக்கியவான்கள்''
(வெளி. 14: 13)



### திரு. ஆர். மகேந்திரன்

பிறப்பு: 18 - 11 - 1949 கர்த்தருக்குள் நித்திரை: 8 - 4 - 1989

கர்த்தருக்குள் நித்திரையடைந்த திரு. ஆர். மகேந்திரன் அவர்களுக்காக 08 - 05 - 89 மதியம் 12. 30 மணியளவில் அவரது இல்லத்தில் ஒரு ஸ்தோத்திர ஆராதனை நடைபெறும். இவ்வாராதனையில் வந்து கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், தாய், மாமா, மாமி,
சகோதர, சகோதரிகள்,
மச்சான்மார், மச்சாள்மார்,
மருமக்கள், பெறுமக்கள்,
கல்வாரி சபையார்.

34/3, இராமநாதன் வீதி.
கலட்டி,
யாழ்ப்பாணம்.

(443)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த

# உள்ளூராட்சி ஊழியர்களுக்கு இரண்டு வருட முற்பணம் இல்லையா?

புதுக்குடியிருப்பு மே 8

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அரசாங்க ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்ட 2 வருட கால சம்பள முற்பணம் அங்குள்ள உள்ளூராட்சிச் சேவை ஊழியர்களுக்கும் வழங்கப்படுமா? இதனை வழங்குவதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் இதுவரை மேற்கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது.

திணைக்களத்துக்குத் திணைக்களம் இத்தகைய வேறுபாடு காட்டப்படுவதனால் உள்ளூராட்சி சேவை ஊழியர்கள் விரக்தி அடைந்துள்ளனர்.

இதுபற்றி முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சேவை ஊழியர் ஒருவர் உதயன் செய்தியாளருக்குத் தமது நிலையை விளக்குகையில்; சகல உள்ளூராட்சி ஊழியர்களுக்கும் முற்பணம் வழங்க பெரும் தொகைப் பணம் தேவைப்படுமாகையால் அத்தொகையைச் செலுத்த உள்ளூராட்சி மன்றங்களால் இயலாது உள்ளது.

இதனைக் காரணமாகக் காட்டி எமக்குக் கிடைக்க வேண்டிய முற்பணம் மறுக்கப்பட்டுள்ளது.

ஆனால் உள்ளூராட்சிச்சேவை ஆணைக்குழுச் செயலாளரினால் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சித் திணைக்களங்களுக்கு அனுப்பப்பட்ட 30-11-1988 ஆம் திகதியிடப்பட்ட 01/2 இலக்க சுற்றறிக்கையின்படி இந்த இரண்டுவருட சம்பள முற்பணத்தை உள்ளூராட்சி மன்றங்களே செலுத்த வேண்டும் என்றும்—

அதற்கு நிதிபற்றுக்குறை காரணமாக இருப்பின் முற்பணக் கணக்கு இல, 82 இல் இருந்து அதற்கான நிதியை உள்ளூராட்சி ஆணையாளர் வழங்குவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளுவார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிலைமை இவ்வாறு இருக்க உள்ளூராட்சிச் சேவை ஊழியர்களுக்கு இத்தகைய பாகுபாடு காட்டப்படுவது நியாயமாகாது. இப்படி அவர் கூறினார். (ச- 126)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நான்கு

## கூட்டுறவுச் சங்கங்களில் பொருள்களுக்குத் தட்டுப்பாடு

தாளையடி, மே 8

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 4 கூட்டுறவுச் சங்கங்களுக்கு உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்குரிய உணவுக் கட்டளைகளை உணவுத் திணைக்களம் வழங்காததினால் கூட்டுறவுச் சங்கங்களில் உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவியது.

கரைச்சி தெற்கு, கரைச்சி வடக்கு, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய 4 கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர்களும் கடந்த சில தினங்களாக யாழ். செயலகத்திலுள்ள உணவுத் திணைக்களத்திற்குத் தினமும் சென்று ஏமாற்றத்துடன் திரும்பினர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னர் வழங்கப்பட்ட உணவு முத்திரை பெறுமதியிலும் பார்க்க இரு மடங்கு பெறுமதியான புதிய உணவு முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் அந்த உணவு முத்திரைகளுக்கு வழங்குவதற்குத் தேவையான அரிசி, மா ஆகியவற்றுக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் தட்டுப்பாடு காணப்படுகிறது.

இதனால் பொதுமக்கள் பெரும் சிரமத்தையும், கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் நெருக்கடியினையும் எதிர்நோக்க வேண்டி உள்ளது. [ஒ-114]

## வவுனியாவில் அடகு நகை மீளளிப்பு

வவுனியா, மே 8

வவுனியா மக்கள் வங்கியில் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை இரண்டாம் கட்டமாக அடகு நகைகள் மீளளிக்கும் வேலைகள் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜூலை 13 ஆம் திகதியும் அதற்கு முன்னர் பணம் செலுத்தியவர்களுக்கு மட்டுமே எதிர்வரும் 20 ஆம் திகதி நகைகள் வழங்கப்படும். அடுத்தடுத்து நகை வழங்கப்படும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்று வங்கி முகாமையாளர் திரு. எஸ். இளம்பிறைநாதன் தெரிவித்துள்ளார். [ஒ-164]

## வைத்தியசாலை வெள்ளிவிழா

சாவகச்சேரி, மே 08

மட்டுவில் வடக்கு ஆரோக்கியவாச வைத்தியசாலையின் வெள்ளிவிழாவும் வைத்தியர் திரு. பே. பிலிப்பின் மணிவிழாவும் இம் மாதம் 23 ஆம் திகதி நடைபெறும்.

இதனை ஒட்டி மரம் நடும் வைபவம், மருத்துவ ஆய்வரங்கு, மலர் வெளியீடு, மாணவர் உதவித்திட்டம், விதவைகள் உதவித் திட்டம், பொதுக் கூட்டம், இன்னிசை நிகழ்ச்சிகள் ஆகியன இடம் பெறும்.

விழா மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-31)



செல்வி வசந்தி வாமதேவனின் பரத நாட்டிய அரங்கேற்றம் 13 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறும்.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி சம்பிரஜானந்தா அரங்கேற்றத்துக்குத் தலைமை வகிப்பார்.

செல்வி வசந்தி வாமதேவன் ஸ்ரீகாந்தம் சகோதரிகளில் ஒருவரான திருமதி சரோஜினி இராஜதுரையின் மாணவியாவார். குழந்தை வைத்திய நிபுண ஆலோசகர் டாக்டர் எஸ். வாமதேவனினதும் கொழும்பு பெரியாஸ்பத்திரி டாக்டர் திருமதி எம். வாமதேவனினதும் புதல்வியான இவர் கொழும்பு மெதடிஸ்த கல்லூரியில் 8 ஆம் ஆண்டு மாணவியாவார்.

செல்வி வசந்தியின் அபிநயத் தோற்றம் ஒன்றையே மேலே உள்ள படத்தில் காண்கிறீர்கள். (ச)

## வழிபாட்டு உணர்வைப் பரப்ப திருத்தலப் பாதயாத்திரை உதவும்

### பாத யாத்திரை குழுவை வரவேற்று உரை

சாவகச்சேரி, மே 08

மக்களிடையே பக்தி மார்க்கத்தை வளர்க்கவும் ஆலய வழிபாட்டுணர்வைப் பரப்பவும் திருத்தலப் பாத யாத்திரைகள் பெரிதும் உதவும். நால்வர் பெருமக்கள் காட்டிய வழியில் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா இதனை நடத்திவருவது பாராட்டுக்குரியது. அவர் மேற்கொண்டுள்ள ஆத்மீகப் பணிகள் இப்பகுதி மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளன.

நுணுவில் மேற்கு விளைவேலி மருதடி விநாயகர் ஆலயத்தில் பாதயாத்திரைக் குழுவினரை வரவேற்று உரையாற்றுகையில் ஆலய பரிபாலன சபையின் செயலாளர் ச. ம. அருளம்பலம் இப்படிக் கூறினார்.

ஆத்மஜோதி முத்தையா பேசுகையில் ''நாள்தோறும் இருபதுக்கும் அதிகமான தலங்களைத் தரிசிக்கக் கொடுத்து வைத்தது இறைவன் திருவருளே. வீதிதோறும் பூரண கும்பங்கள் வைத்து வரவேற்பது இத்தொண்டில் மக்கள் கொண்ட விசுவாசத்தைக் காட்டுகிறது'' என்று கூறினார்.

துர்க்கை அம்மன் கோவில், கோவிற்கேணி கந்தசுவாமி கோவில், பன்றித்தலைச்சி அம்மன் கோவில், கல்வத்துச் சிவன் கோவில், பிள்ளையார் கோவில், ஞான வைரவர் கோவில், முதலானவற்றுக்கு பஜனைக் குழுவினர் சென்று தரிசித்தனர். (க-31)

## வசதியீனங்களை நிவர்த்திசெய்வது பாடசாலை அபி. சங்கப் பொறுப்பு

கொக்குவில், மே 8

இன்றைய மாணவர்களின் பெற்றோர்கள் படித்தவர்களாக இருப்பதனால் ஒரு பாடசாலையை அபிவிருத்தி செய்வது இலகுவாகவுள்ளது. பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்களினதும், பெற்றோர்களினதும் அயராத உழைப்பும், கண்காணிப்பும் அவசியம் ஆகும்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு ஆரம்ப மகளிர்பாடசாலையான எமது பாடசாலைப் பிள்ளைகளின் கல்வி ஒழுக்கம் பழக்க வழக்கங்கள் மேம்பாடு அடைந்து வருவதனால் அனுமதிக்கு மிகுந்த நெருக்கடி ஏற்படுகிறது. பிள்ளைகளுக்கு சில வசதிக் குறைவுகளுண்டு. அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டியது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கடமை ஆகும்.

யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை அபிவிருத்திச்சங்க கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய பாடசாலை அதிபர் திருமதி யோ. விக்னேஸ்வரா மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலை ஆரம்பமாகி 10 ஆண்டுகள் நிறைவு பெறுவதை சிறப்பாக கொண்டாடுவதெனவும், சிறப்புமலர் வெளியிட்டு, பரிசளிப்பு வைபவத்தையும் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (இ-69)

கூட்டத்தில் உரையாற்றியவர்களின்

## பெயர்கள் அறிவிக்கப்படாமல் நடந்த மேதினக் கூட்டம்

கொழும்பு, மே 8

பொறளை - கோட்டை மைதானத்தில் நடந்த மே தினக் கூட்டத்தில் பேசியவர்களின் பெயர்கள் அறிவிக்கப்படவில்லை.

இக்கூட்டத்தை எசத் லங்கா ஜனதாக் கட்சி அனைத்துப் பல்கலைக்கழக பௌத்த பிக்கு மாணவர் ஒன்றியம் அனைத்துப் பல்கலைக்கழக ஒன்றியம் ஆகியன இணைந்து நடத்தின. பாதுகாப்புக் காரணங்களுக்காக பெயர்கள் அறிவிக்கப்படாமலேயே பேச்சாளர்கள்மேடையில்ஏறிப்பேசினர்.

புகைப்படம் எடுக்க முயற்சித்த ஒரு நபரை கூட்டத்தை நடத்தியவர்கள் பிடித்து மேடையில் ஏற்றினர். அவரது கமராவில் இருந்த படச்சுருள் பறிமுதல் செய்யப்பட்டது. [ஒ-எ]

## வட, கிழக்குக்கு 84லட்சம் ஓடுகள்

கொழும்பு, மே 8

மட்பாண்டக் கூட்டுத்தாபனம் உற்பத்தி செய்யும் ஓடுகளில் 60 சதவீதமானவை வடக்கு-கிழக்கு மாகாண புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும்.

மட்பாண்டக் கூட்டுத்தாபனம் இதற்கான முடிவை எடுத்திருக்கிறது.

இதன்படி இந்த ஆண்டில் வடக்கு-கிழக்கு மாகாண புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்காக 84 லட்சம் ஓடுகள் வழங்கப்படும். (ஒ-எ)

## சுன்னாகம் வர்த்தகர்கள் ஒத்துழைப்பு

சுன்னாகம், மே 8

கடந்த மேதினத்தன்று சுன்னாகத்தில் உள்ள சகல வர்த்தக ஸ்தாபனங்களையும் மூடுமாறும் தொழிலாளர் - சிப்பந்திகள் அனைவருக்கும் சம்பளத்துடனான விடுமுறை வழங்குமாறும் சுன்னாகம் வர்த்தக ஊழியர் சங்கம் விடுத்த கோரிக்கைக்கு இணங்க சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன.

ஞாயிறு திங்கள் ஆகிய இருதினங்களிலும் வர்த்தகப் பெருமக்கள் அளித்த ஆதரவுக்காகவும் ஒற்றுமைக்காகவும் சுன்னாகம் வர்த்தக ஊழியர் சங்கத்தலைவர் திரு. என். பேரம்பலம் சகல வர்த்தக ஸ்தாபனங்களின் உரிமையாளர்களுக்கும் நன்றி தெரிவித்தார். [இ - 27]

## கல்முனையில் தொழிலாளர் சங்கம்

கல்முனை, மே 08

கல்முனையில் ஐக்கிய தொழிலாளர் நாட்டாமைச் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கல்முனைப் பிரதேசத்தில் உள்ள ஆயிரக்கணக்கான நாட்டாமைத் தொழிலாளர்கள் தற்போது பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு இலக்காகி கஷ்டமுறுவதைப் போக்கவே இச்சங்கம் உருவாக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் செயலாளர் திரு. கே. எஸ். காளிதாஸன் தெரிவித்தார். (ச-84)

## கவனிப்பாரற்ற வைத்தியசாலை

கல்முனை மே 8

கோமாரி மக்களின் நன்மை கருதி கடந்த பல வருடங்களுக்கு முன்னர் கோமாரிக் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள அரச வைத்தியசாலை ஒன்று கவனிப்பாரற்ற நிலையில் இருக்கிறது.

இங்கு ஒரு நிரந்தர வைத்தியர் இருந்தும் அண்மையில் அவர் வேறு இடத்துக்குஇடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். தற்காலிமாக வாரத்துக்கு மூன்று நாட்கள் சேவை செய்ய வேண்டிய டாக்டர் ஒருவர் இங்கு நியமிக்கப்பட்டிருந்தும் பயன் இல்லை என்று கூறப்படுகிறது. இதனால் கோமாரி ஊறணி மக்கள் பெரிதும் கஷ்டபடுகின்றனர். (ச-84)

## கணனி அறிமுகப் பயிற்சி

கொக்குவில், மே 8

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் கணனி அறிமுறைப் பயிற்சி நெறிக்கு மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கொக்குவில் பல் தொழில்நுட்ப நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாண நிலையத்திலிருந்து இதற்கான விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாவது தொகுதி மாணவர்களுக்கான பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இரண்டாவது தொகுதியில் நூறுமாணவர்கள் வரையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனத் தெரிய வருகிறது. [இ - 69]


### தொழிற்சாலைப் பயிலுனர்கள்

எமது தொழிற்சாலைக்குப் பயிலுனர்கள் தேவைப்படுகிறார்கள். கடைச்சல் வேலையில் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

''சிக்மா பம்ப்ஸ்''

யுனைற்றட் அக்ரோ என்ஜினியர்ஸ்,
நாவற்குழி,
கைதடி.

(C/ 2526)



### நித்திய பூஜை செய்வதற்கு குருக்கள் தேவை

கோண்டாவில் வடக்கு தில்லையம்பதி ஸ்ரீசிவகாமி அம்பாள் திருக்கோயிலுக்கு நித்திய பூஜை செய்வற்கு குருக்கள் தேவை. நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்க்கலாம்.

செயலாளர்.

(431)



### FORTUNA ENTERPRISES
### பிரயாண ஒழுங்குகள்

குவைத்

LABOUR LICENCE NO. 79

(1) 3 ALUMINIUM WORKERS
(அலுமினியம் தொழிலாளர்)
சம்பளம்:- 80 K. D -Rs 9600/-

(2) 5 ALUMINIUM TECHNICIANS
(அலுமினியம் தொழில்நுட்பவியலுனர்)
சம்பளம்:- 70 K. D -Rs 8400/-

(3) 5 GENERAL ELECTRICIANS
(பொது எலக்ரிஸன்)
சம்பளம்:- 70 K. D -Rs 8400/-

(4) CLEANERS (Hospital)
(ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர்)

தொடர்பு கொள்ளவும்:-

இ. விஸ்வேஸ்வராயன்,
3 ம் கட்டை லேன்.
கே. கே. எஸ் வீதி,
கொக்குவில்.

(C/2525)



இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்
வடபிராந்தியம்,
ஆனையிறவு.

### அறிவித்தல்

### மீன் பதனிடுவதற்கான அரைத்த உப்பு

மேற்குறிப்பிட்ட உப்பு விநியோகத்திற்கு, தயார் நிலையில் உள்ளது. 50 கிலோ எடையுள்ள ஒரு மூடையின் விலை 38/- ஆகும். ஆனால் இதற்குரிய கொள்கலனை வாடிக்கையாளர்களே தங்கள் தேவைக்கேற்ப கொண்டுவருதல் வேண்டும். இவ்விடம் கொள்கலன் வழங்கப்படமாட்டாது. தாங்கள் கொள்வனவு செய்ய வேண்டிய அளவிற்கு மக்கள் வங்கியில் இருந்து வங்கி உண்டியல்களை இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் என பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

செ. வேலாயுதபிள்ளை,
பிராந்திய முகாமையாளர்

வடபிராந்தியம்,
ஆனையிறவு
03- 05- 89

[ஒ/2358]



வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு

### இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலைக்கு அளவெட்டி களிமண் தளத்திலிருந்து 10 000 மெ. தொன் சக 5% களிமண்ணை வெட்டவும், ஏற்றுவதற்கும் போக்குவரத்து செய்வதற்கும் இறக்குவதற்குமான கேள்வி

காங்கேசன்துறை காங்கேசன் சீமெந்து தொழிற்சாலைக்கு அளவெட்டி களிமண் தளத்திலிருந்து 10 000 மெ. தொன் சக 5% களிமண்ணை வெட்டுவதற்கும் ஏற்றுவதற்கும் போக்குவரத்து செய்வதற்கும் இறக்குவதற்குமான பொறியிடப்பட்ட கேள்விகள் உள்ளூர் போக்குவரத்தாளர்களிடம் இருந்து இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபன முகாமையாளரால் அழைக்கப்படுகின்றன.

கேள்வி ஆவணங்களை வேலை நேரங்களில் கீழ்க்கண்ட அலுவலகங்களிலிருந்து மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூ. 400/- ஐ ரொக்கமாகச் செலுத்திப் பெறலாம்.

(ஏ) பிரதிப் பொது முகாமையாளர் (வழங்கல்கள்),
இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்,
130, டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு—2.

(பீ) வேலைத்தள முகாமையாளர்,
காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை,
காங்கேசன்துறை.

இரத்துச் செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை ஒரு செட்டுக்கு மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ. 100/- ஐச் செலுத்திப் பெறலாம்.

கேள்வி ஆவணங்களை 989-மே-18 பகல் 12-00 மணி வரை பெறலாம்.

கொழும்பு-2 டபிள்யூ.ஏ.டி. ராமநாயக்க மாவத்தை 130, இலங்கை சீமெந்து கூட்டுத்தாபன வழங்கல் பகுதியில் முற்பகல் 10-00 மணிக்கு கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.

கேள்விகளைத் திறப்பதற்கு முன் இலங்கை ரூபாய் 50,000/-ம் பெறுமதியான கேள்வி பிணையை/உறுதிக் கடிதத்தை ஓர் உள்ளூர் வங்கி மூலம் கேள்விதாரர் செலுத்த வேண்டும்.

முகாமையாளர்.

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை.

(C/2528)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவொளி

அறிவொளி கல்வி வெளியீட்டுக்கு உயர்தர கலை, வர்த்தக துறை மாணவர்களுக்கு ஏற்ற கட்டுரைகள் விரிவுரையாளரிடமும் பட்டதாரி ஆசிரியர்களிடமும் இருந்து எதிர்பார்க்கின்றோம். பிரசுரத்திற்கு ஏற்கப் படும் கட்டுரைகளுக்கு சன்மானம் வழங்கப்படும்.

ஆசிரியர்
அறிவொளி
த. பெ. இல. 162,
கொழும்பு.

[309]



## BRIGHT TRAINING CENTRE

க. பொ. த. உயர்தர வர்த்தக, கலை, மாணவர்கள் நன்மை கருதி பிரபல விரிவுரையாளர்களாலும், ஆசிரியர்களின் கூட்டு முயற்சியாகவும் வெளிவருகிறது.

'அறிவொளி'
கல்வி வெளியீடு

இதற்கென BRIGHT STUDY CIRCLE எனும் கல்வி வட்டம் ஒன்றும் மாணவரிடையே ஆரம்பிக்கப் படுகின்றது. கல்விவட்டத்தைப்பற்றி அறியவிரும்புவோர் சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க:

அறிவொளி,
பிறைட் பயிற்சி நிறுவனம்,
த. பெ. இல. 162.
கொழும்பு.

(308)


## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
### பொன்னையா பாக்கியலஷ்மி

**மண்ணில்:** 28 - 06 - 1929 **விண்ணில்:** 17 - 05 - 1988

அன்புத் தெய்வமே! பாசத்தின் பிறப்பிடமே! மாறாத அன்பில் எம்மை மகிழ வைத்த அன்புத்தெய் வமே! திடீரென மீளாத்துயில் கொண்டது ஏனோ! எம் அன்புத்தெய்வமே! அம்மா! உம் எழில் முகத்தை எப்போ காண்போம்!

உங்கள் பிரிவால் வாடும்:
அன்புக்கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

77/5, A. V. றோட்,
அரியாலை,
யாழ்ப்பாணம். [10849]

## 1ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



### அ. பெ. இராசநாயகம்

**பிறப்பு:** 19 - 09 - 1935 **இறப்பு:** 08 - 05 - 1988

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும் இவ்வேளையில் அன்னாரின் சேவையை கௌரவித்து எமக்கு பல வழி களிலும் உதவிய வைத்தீஸ்வரா வித்தியாலய பழைய மாணவர்களுக்கும், மன்றத்திற்கும் மற்றும் யாவருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மனைவி, மக்கள்.

நாவாந்துறை. (419)

● இவர்களுக்கு இப்படி ஒரு சலுகை

# நான்கு வருடங்களுக்கு குறைவாக கடமை புரிந்த ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

கொழும்பு, மே 8

நான்கு வருடங்களுக்கு குறைந்த காலம் கடமை புரிந்த ஆசிரியர்களுக்கு விசேட சலுகை அடிப்படையில் இடமாற்றம் வழங்கப் படும்.

மாவட்ட ரீதியில் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கே இச் சலுகை வழங்கப்படும்.

மாவட்ட ரீதியில் நியமனம் பெற்ற ஆசிரியருக்கு எவ்வித இடமாற்றமும் நான்கு வருடங்களுக்குள் வழங்கப்படுவதில்லை. இதுவே நடைமுறையில் இருந்து வருகிறது.

கல்வி அமைச்சரின் புதிய ஆலோசனைப்படி 4 ஆண்டுகளுக்குக் குறைந்த காலம் கடமை புரிந்த இந்த ஆசிரியர்கள் விரைவில் இடமாற்றங்களைப் பெறுவர்.

மாவட்ட ரீதியில் நியமனம் பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை 40 ஆயிரமாகும். இவர்களில் 25 ஆயிரம் பேர் வரையில் இடமாற்றத்துக்கு விண்ணப்பித்திருக்கின்றனர்.

இதனிடையில் 4 வருடங்கள் சேவையைப் பூர்த்தி செய்த ஆசிரியருக்கு ஜூன் முதலாம் திகதி முதல் இடமாற்றங்களை வழங்க கல்விச் சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகிறது. [ஒ-எ]

## பரந்தனில் நடந்த மே தினக் கூட்டம்

வட்டக்கச்சி, மே 8

வடபிராந்திய சி. எம். யூ கிளைகளின் மே தினப் பொதுக் கூட்டம் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு முன்பு ஊர்வலமும் நடைபெற்றது.

கூட்டத்துக்கும் ஊர்வலத்துக்கும் சி. எம். யூ. உபதலைவர் திரு. ஜீ. ஜெகநாதன் தலைமை வகித்தார். [இ-163]

# ஹாட்லி 150 ஆம் நிறைவை முன்னிட்டு தபால் முத்திரை

வல்வெட்டித்துறை மே 8

ஹாட்லிக்கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இலங்கைத் தபால் தந்தித் திணைக்களம் ஜூன் மாதம் 5ஆம் திகதி 75 சத தபால் முத்திரை வெளியிட்டுச் சிறப்பிக்க உள்ளது.

இந்த முத்திரையில் பாடசாலை இலச்சினை பொறிக்கப் பட்டுள்ளதாக அறிய வருகின்றது. தபால் முத்திரை வெளியீட்டு விழா ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. [க-160]

# மாகாண சபைகளுக்கு 1, 15, 000 ஊழியர்கள்

கொழும்பு, மே 8

மாகாண சபைகள் மூலம் சீரான நிர்வாகத்தை மேற்கொள்வதற்கு உதவியாக, 22 அமைச்சுக்களில் இருந்து ஒரு லட்சத்து 15ஆயிரம் அரசாங்கஊழியர்கள், மே மாதம் முதலாம் திகதி முதல் மாகாண சபைகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மாகாண சபைகளுக்கு, அவற்றின் நிர்வாக அமைப்புக்களைச் சீராக ஏற்படுத்திக் கொள்வதற்காக ஒரு வருடத்திற்கு இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாகப் பொது நிர்வாக அமைச்சுதெரிவித்திருக்கிறது. (ஒ-எ)

# சமூகத்தின் பாரம்பரியங்களை இளம் தலைமுறை பேண வேண்டும்

## பிரார்த்தனைக் கூட்டத்தில் அதிபர் உரை

யாழ்ப்பாணம், மே.8

எமது சமூகத்தின் தனித்துவம் மிக்க பாரம்பரிய பண்புகளைப் போற்றிப் பேண வேண்டியது எமது கடமையாகும். எமது முதிய தலைமுறையினர் போற்றி வந்த பண்பாட்டு அம்சங்களை இளம் தலைமுறையினர் பேணும் உணர்வை இன்றைய கால கட்டத்தில்ஏற்படுத்துதல் அத்தியவசியமாகும்.

கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியசாலையில் நடைபெற்ற விசேட ஒன்று கூடல் பிரார்த்தனைக் கூட்டத்தில் உரையாற்றும் பொழுது பாடசாலை அதிபர் திரு. கா. கணேசதாசன் மேற்கண்டவாறு கூறினார்.

இப் பிரார்த்தனைக் கூட்டத்துக்கு பெற்றோர்கள் பழைய மாணவர்கள் சமுகமளித்திருந்தனர்.

திரு. கணேசதாசன் தமது உரையில் மேலும் கூறியதாவது;

பிதா மாதா குரு என்பது நாம் காலாதி காலமாகப் போற்றிவந்த தெய்வங்கள். தாய், தந்தையைச் சுற்றி வந்த பிள்ளையாருக்குத் தான் சிவபெருமான் மாம்பழத்தை அளித்தார். உலகத்தைச் சுற்றிவந்த முருகனுக்கல்ல. ஆகவே தாய், தந்தை ஆசிரியர் ஆகியோரைப் பணிந்து நேசித்து மதித்து வாழும் நற்பண்பு உள்ளவர்களைச் சமூகம் எப்பொழுதும் மதிக்கும். கடவுளும் இவர்களுக்குக் கை கொடுப்பார்.

இப்படி அவர் கூறினார்.

இவ் ஒன்று கூடலுக்குச் சமூகமளித்திருந்த பெற்றோர்களை அவர்களின் பிள்ளைகள் வணங்கி ஆசீர்வாதத்தைப் பெற்றனர்.

ஆசிரியை திருமதி ச. சந்திரசேகரி ஆரம்பப் பிரிவு அதிபர் திரு. த. திருநாவுக்கரசு ஆகியோர் மாணவர் ஒழுக்கம் சம்பந்தமான சிறப்புரையாற்றினர்.

பெற்றோருடன் பாடசாலைக்குச் சமுகமளித்த மாணவர்களுக்குப் பரிசாக அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன. [ச]

# பஸ் இன்றி மக்கள் அவதி

கல்முனை மே 8

பொத்துவில் தொகுதியிலுள்ள அக்கரைப்பற்றில்ஒரு பஸ் டிப்போ இருந்தும் போக்கு வரத்துக்கு போதுமான பஸ்கள் இல்லாததால்அக்கரைப்பற்றில் இருந்து பொத்துவிலுக்கு செல்லும் பொதுமக்கள் அக்கரைப்பற்றில் மணித்தியாலக் கணக்கில் காத்துக் நிற்க வேண்டியுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து காலையில் பொத்துவில் நோக்கிப் புறப்படும் தபால் பஸ்ஸை தவற விடுபவர்கள் அக்கரைபற்றுக்குச் சென்றுஅங்கிருந்து பொத்துவிலுக்கு பஸ் எடுக்க முடியாது தினமும்அவதியுறுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அக்கரைப்பற்று பொத்துவில் பஸ் சேவையின் அவல நிலை பற்றி அக்கரைபற்று பஸ் டிப்போ உத்தியோகஸ்தர் ஒருவரிடம் கேட்டபோது அக்கரைப் பற்றில் உள்ள டிப்போவில் மொத்தம் 28 பஸ்களே உள்ளன.

அதில் பத்து பஸ்கள் மாத்திரமே சேவையில் ஈடுபடுகின்றன.

மீதி பதினெட்டு பஸ்களும் இயங்க முடியாத நிலையில் உள்ளன. (ச-84)

# பஸ்கள் வந்தும் பயனில்லை

காரைநகர் மே 8

காரைநகர் பஸ் டிப்போவுக்கு புதிய பஸ்கள் பல வந்துள்ளன் அவற்றில் இரண்டு புதிய சொகுசு பஸ்கள்

ஆனால் காரைநகரின் பிரதான மேற்கு வீதி சாதாரண பொது மக்களே நடக்க இயலாத அளவுக்கு மோசமடைந்துள்ளதால் புதிய பஸ்கள் வந்தும் அவற்றில் பயணம் செய்ய முடியாத பரிதாப நிலையில் காரைநகர் மக்கள் உள்ளனர் (இ-73)

# நிவாரணம் வழங்கப்படவில்லை

அம்பாறை மே 8

அம்பாறை மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களுள் ஒன்றான பதினொரும் கொலணியில் வசித்த பெரும்பான்மை சமூகத்தவர்களால் தாக்குதலுக்கு உள்ளாகிய தமிழ்க்குடும்பங்களுக்கு இதுவரை நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை எனப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடியேற்றக் கிராமமான இங்கு 55 தமிழ் குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்பொழுது இவர்கள் அனைவரும் மண்டூர், குருமண்வெளி, பெரியகல்லாறு, துறைநீலாவணை ஆகிய பகுதிகளிலுள்ளதமது உறவினர்களது வீடுகளில் தஞ்சம் புகுந்து வாழ்கின்றனர். (ச-14)


சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வரைவுள்ளது)
சுன்னாகம்

## பதவி வெற்றிடங்கள்

1. **கூலியாட்கள்:**

எமது மொத்த விற்பனை நிலையத்தில் கூலி வேலை செய்வதற்கு நல்ல உடல் வலிமையுள்ள, ஆரோக்கியமான கூலியாட்கள் உடன் தேவை.

வேதனம்;- தெரிவு செய்யப்படுபவர்களுக்கு துண்டு அடிப்படையில் வேதனம் வழங்கப்படும். சங்கத்தால் வழங்கப்படும் மற்றைய அலவன்சுகளும் வழங்கப்படுவதுடன், பிற்காலச் சகாயநிதிக்கும், ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் உதவு தொகை செலுத்தப்படும்.

2. **லொறிக் கிளீனர்:-**

தகுதி- 5 ஆம் வகுப்பு சித்தியடைந்திருப்பதுடன் நல்ல ஆரோக்கியமான உடல்நிலை யுள்ளவர்களாகவும், 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக வுமிருத்தல் வேண்டும்.

சம்பளம்:- ரூ. 700/- — ரூ. 950/-
15 × 10, 20 × 5

இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் அலவன்சுகளும் வழங்கப்படுவதுடன் சேமலாப நிதிக்கும், ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் உதவு தொகை செலுத்தப்படும்.

3 **தேநீர் தயாரிப்பாளர்:-**

தகுதி:- தரமான தேநீர் தயாரிப்பதில் அனுபவமும் நல்ல ஆரோக்கிய நிலையுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் பொது முகாமையாளர், சுன்னாகம் பல நோ. கூ. சங்கம், சுன்னாகம் என்ற விலாசத்திற்கு 19-05-89-க்கு முன் அனுப்பப்படல் வேண்டும்.

—பொது முகாமையாளர்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
06-05-89 [C/2531]


## விவசாய சஞ்சிகைகள்

மானிப்பாய், மே 08

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் 'கமநலம்' ''கமத்தொழில் விளக்கம்'' ஆகிய விவசாயம் சம்பந்தமான சஞ்சிகைகள் வெளி வந்துள்ளன.

யாழ்ப்பாண மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் அலுவலகம், யாழ்ப்பாண மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் ஆகியவற்றில் இருந்து இவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும். (க-19)

## படை முகாம் மூடப்பட்டது

ஒட்டுசுட்டான், மே 8

மாங்குளத்திற்கு சமீபமான ஒலுமடு கிராமத்தில் உள்ள அபிவிருத்திச்சபை உப-அலுவலக வளவில் முகாமிட்டிருந்த இந்திய படையினரின் முகாம் மூடப்பட்டு விட்டது. (இ-113)


## கொம்பியூட்டர் பயிற்சி

மல்லாகத்தில் ஆரம்பமாகிறது.

**Basic Programming Course**

09 - 05 - 1989
(4. 00 p.m)
INITIAL Fee: Rs. 500/-

IDP COMPUTER CENTRE
342, K.K.S. Road,
Jaffna.

Branch:
7th Mile Post,
Mallagam.
(சி/2455)



சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
(வரைவுள்ளது) சுன்னாகம்.

## விவசாயிகளின் கவனத்திற்கு,

எம்மால் விவசாயிகளிடமிருந்து தரமான மிளகாய் செத்தல் சந்தை விலைக்கேற்ப கொள்வனவு செய்யப் படும்.

தலைமை நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்,

பொதுமுகாமையாளர்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
06-05-89. [சி/2530]



வலி-கிழக்கு தென்பகுதி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## அறிவித்தல்

வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 6000 வரையிலான வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன. மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/-உம், கேள்விப் பத்திரம் ஒன்று ரூபா 1/-ம் செலுத்தி சங்க வேலை நாட்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 17-5-89ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

நீர்வேலி
1989-05-03 பொது முகாமையாளர்.
(சி-2532)


## 31ஆவது நாள் நினைவஞ்சலி



### செல்வன் மருதப்பு யோகேஸ்வரன்

கண்ணன் (குட்டி) யோகேஸ்வரன்

**தாயின் மடியில்:** 23 - 08 - 1969 **தாயக மண்ணில்:** 08 - 04 - 1989

''கண்ணன்'' என்ற உன் நாமம் கேட்டிட
காதெல்லாம் இனிக்குதையா!
''குட்டி'' என்று உன் பெயர் கூறிட
குவலயமே கண்ணீர் சிந்துதையா!

நண்பர்கள், உறவினர்கள்.

(10855)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**
வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

**பொருள்:**
வெற்றியே பெறுவதானாலும் சூதாட்டத்தை விரும்பக்கூடாது. வென்ற வெற்றியும், தூண்டில் இரும்பை இரை என்று மயங்கி மீன் விழுங்கினாற் போன்றது

உதயன்
[illegible]
இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
08 - 05 - 1989 சு. பெ: இல: 23

# ஒன்றுக்குப் பதினைந்தா?

பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு ஈரான் விடுத்திருக்கும் ஓர் அழைப்பு பயங்கரம் செறிந்ததாகும். பச்சைப்பயங்கரவாதமாகும்.

பலஸ்தீனியர் ஒருவர் கொலை செய்யப்பட்டால், அதற்குப் பதிலாக, பழிவாங்கும் நடவடிக்கையாக, ஐந்து அமெரிக்கர்களையும், ஐந்து பிரிட்டிஷ்காரர்களையும், ஐந்து பிரெஞ்சுக்காரர்களையுமாக மொத்தம் பதினைந்து பேர்களைப் ப. வி. இயக்கத்தினர் கொல்ல வேண்டும். இவ்வாறு ஈரானிய சபாநாயகர் ரஸ்வன் ஜானி விடுத்திருக்கும் பகிரங்க வேண்டுகோளையே இங்கே குறிப்பிடுகிறோம்,

ஒரு கொலைக்குப் பதினைந்து பதிற் கொலைகள் மட்டுமல்ல, அமெரிக்க, பிரிட்டிஷ், பிரெஞ்சிய தொழிற்சாலைகளையும் குண்டு வைத்துத் தகர்க்க வேண்டும் என்பதும் ரஸ்வன்ஜானியின் பகிரங்க வேண்டுகோளில் ஓர் அம்சமாகும்.

சபாநாயகர் ரஸ்வன்ஜானி ஈரானிய அரசாங்கத்தின் அங்கீகாரமும், அதிகாரமும் நிறைந்த முன்னணித் தலைவர்களில் ஒருவர். ஆகையால் அவரது பகிரங்க வேண்டுகோளை ஈரானின் உத்தியோக பூர்வ அழைப்பாக எடுப்பதில் தப்பில்லை என்றே கருதுகிறோம்.

ஈரானின் இந்த அழைப்பை, ப. வி. இயக்கத்துக்கான பகிரங்க வேண்டுகோளைப் படித்ததும் எவருக்கும் ஈரானையும், ஈரானியத் தலைவர்களையும் பயங்கரவாதிகள் என்று நாமம் சூட்டவும், கண்டிக்கவுமே மனம் உந்தும்.

ஒன்றுக்குப் பதினைந்து என்ற வீதக் கணக்கில் மனித உயிர்களைக் கொல்லுமாறு கேட்பது பயங்கரவாதமே அன்றி வேறல்ல. ஓர் அரசாங்கமே பயங்கரவாதத்தைத் தூண்டி விடுவதா? பிரச்சினைகளை, குழப்பங்களை, மோதல்களை, அமைதி வழியில் தீர்ப்பதற்கு நாடாமல் வன்செயல்களைத் தூண்டி மேலும் அழிவுகளை உண்டாக்குவதா?

பலஸ்தீனியப் பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம், சமாதான வழிகளில், அமைதி வழிகளில் தீர்ப்பதற்குத் தலைவர் யாசிர் அரபாத் முயற்சி செய்து வரும் இவ்வேளையில், ஈரானின் இந்த அழைப்பு நாசகாரமானது, எல்லாவற்றையும் குழப்பிவிடவல்லது என்பதை எவரும் ஒப்புக்கொள்வர்.

உலகத்தில் உள்ள நாடு ஒவ்வொன்றும் தனக்கு எதிரியான நாட்டின் மீது இப்படி வன்செயல், பழிவாங்கல்களை மேற்கொண்டால் மனித சமுதாயம் என்னாவது? இப்போதே போட்டியும், பொறாமையும், அதிகாரவெறியும் மிகுந்த நிலையில் உலக நாடுகள் முட்டி மோதி அழிந்து கொண்டிருக்கின்றன ஈரானின் முன்னுதாரணத்தையும் அவை கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டால், பூலோகம் நிமிடக் கணக்கில் நரகலோகமாகிவிடும் என்பதில் என்ன சந்தேகம்!

ஈரான், உலகப் பெருமதங்களில் ஒன்றான இஸ்லாமிய முறைப்படி அரசாட்சி நடத்தவிழையும் நாடு. வன்செயல்கள், அழிவுகளைவிட அமைதியும் சமாதானமும் தான் நிலையானவை. மனிதாபிமானமும், மனிதநேயமும், சகோதரத்துவமும் உலகில் வளர்வதற்கு அன்பும் அமைதியுமே வகை செய்யும் என்பதை அது உணராமல் போனது ஏனோ? அமைதி வழி போக முனைந்திருக்கும் ப. வி. இயக்கத்தினரை மாற்றுமார்க்கம் செல்வதற்குத் தூண்டுவது கவலைக்குரியதாகும்.

ஈரானின் அழைப்பை ப. வி. இயக்கம் நிராகரித்திருப்பது மகிழ்ச்சி தருவதாகும்.

ஈரானுக்கு இந்தளவு ஆத்திரமும் வேகமும் வருவதற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை என்பதையும் ஒரு பக்கத்தில் உணர வேண்டி உள்ளது.

ஜோர்தானின் மேற்குக் கரையோரப் பகுதியும், காஸா பகுதியும், ஜனாப் யாசீர் அரபாத்தினால் அண்மையில் பிரகடனப்படுத்தப்பட்ட சுதந்திர பலஸ்தீனத்தின் பெரும் பிரதேசங்கள். அவை இரண்டும் இன்னமும் ஏகாதிகளான இஸ்ரவேலியரின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்கின்றன.

1987 டிசம்பரிலிருந்து அந்தப் பகுதிகளை இஸ்ரவேலிடம் இருந்து மீட்பதற்கு பலஸ்தீனியர்கள் தீவிர போராட்டம் நடத்தி வருகிறார்கள். அந்தப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்கள் கொல்லப்படுகிறார்கள். அந்தக் கொலைகளுக்குத் துணை போகும் விதத்தில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய மூன்று நாடுகளும் இஸ்ரவேலுக்கு ஆயுத உதவி செய்வது உலகறிந்த விடயம்.

அதனைக் கருதித்தான் ஒரு பலஸ்தீனியர் கொல்லப்பட்டால், மூன்று நாடுகளையும் சேர்ந்த தலா ஐவர் கொலை செய்யப்பட வேண்டும் என்று ஈரான் பழிவாங்கல் அறிவிப்பு விடுத்திருக்க வேண்டும்.

மொத்தத்தில் பலஸ்தீனியப் பிரச்சினை தீராமல், வீண் அழிவுகள், அனர்த்தங்கள் நீடிப்பது குறித்து இஸ்ரவேல் மட்டுமன்றி முன் சொன்ன மூன்று நாடுகளும் கண்டிக்கப்பட்டவேண்டியவை. தம்மைத் தண்டிக்க எவருமில்லை என்ற இறுமாப்பில் அவை மனிதாபிமானம் இல்லாத இஸ்ரவேலுக்கு உதவி வருகின்றன.

வன்செயல்களைக் கைவிட்டு, சமாதான வழிமூலம் சுதந்திர பலஸ்தீனம் படைக்கவும், ஸ்திரப் படுத்தவும், முன்வந்திருப்பது மட்டுமல்லாமல், இஸ்ரவேலை அழிக்கும் முந்திய பிரகடனத்தையும் ஜனாப் அரபாத் கைவிட்டுவிட்டார்.

இந்த நிலையிலும், இஸ்ரவேலும் அதற்கு முட்டுக்கொடுக்கும் மேற்கத்திய வல்லரசுகளும் தமது அதிகார வெறியையும், அடக்கு முறையையும் கைவிடாவிட்டால், பின்னொரு வேளையில் உலகத்துக்கும், இறைவனுக்கும் பதில் சொல்லியாக நேரிடும்.

மனிதாபிமானமும், மனித நேயமும் உண்மையிலேயே அவர்களிடம் சுடர்விடுமாயின், பலஸ்தீனியப் பிரச்சினை வெகு சுலபமாக, சுமுகமாகத் தீர்க்கப்பட்டுவிடும்.

---

மேற்கு நாட்டு பிரசைகளைக் கொல்லும்

# ஈரான் அழைப்பு மனிதஇனத்துக்கே எதிரானது என பி.எல்.ஓ. நிராகரிப்பு!

### பலஸ்தீனத்தில் தலையிடாதீர்; தெஹ்ரானுக்கு யோசனை!!

ருனிஸ் மே 7

பழிவாங்கல் நடவடிக்கையாக மேற்கு நாட்டுப் பிரசைகளைக்கொல்லும்படி பலஸ்தீனியருக்கு ஈரான் விடுத்த வேண்டுகோளை பலஸ்தீன விடுதலை இயக்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது

பலஸ்தீன விடுதலை இயக்க விவகாரங்களில் ஈரான் தலையிடக் கூடாது என்றும், விடுதலை இயக்கப் பேச்சாளரான அஹ்மத் அப்துல் ரஹ்மான் ருனிஸியாவின் தலைநகரில் நேற்றுத் தெரிவித்தார்.

ஈரானின் தலையீடு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெஹ்ரான் அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசத்தில் இஸ்ரவேலிய இராணுவத்தினால் கொல்லப்படும் ஒவ்வொரு அரபுக்கும் 5 அமெரிக்கர், 5 பிரிட்டிஷ்காரர், 5 பிரெஞ்சுக்காரர் வீதம் கொல்லப்பட வேண்டும் என்று ஈரான் விடுத்த வேண்டுகோள் நச்சுத்தன்மை நிறைந்த ஆலோசனை என்று பலஸ்தீன விடுதலை இயக்கம் வர்ணித்துள்ளது.

சர்வதேச பயங்கரவாதத்தை அப்பாவி மக்களுக்கு எதிராகத் தூண்டிவிடும் ஈரான் முயற்சிக்கு பலியாகக் கூடாது.

விமானங்களைக் கடத்த பயணிகளை பணயக் கைதிளாக வைக்கவேண்டும் என்ற ஈரானின் யோசனை பலஸ்தீனரின் நலனை மட்டும் பாதிப்பது அல்ல; மனிதாபிமானத்துக்கே எதிரானது என்று பலஸ்தீன விடுதலை இயக்கப் பேச்சாளர் சொன்னார். (எ)

### உழுபவனுக்கு நிலம்; தமிழக அரசு சட்டம்

சென்னை, மே 7

உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்கும் சட்டமூலம் தமிழ்நாடு சட்டசபையில் தாக்கல் செய்யப்படவிருப்பதாக அமைச்சர் நாஞ்சில் மனோகரன் அறிவித்தார்.

சட்டசபையின் அடுத்த கூட்டத் தொடரில் இச்சட்டமூலம் தாக்கல் செய்யப்படும் என்று அவர் சொன்னார். (எ)

### கர்நாடகத் தேர்தல் ஜூனில்?

பெங்களூர், மே 7

கர்நாடக மாநில சட்டசபைக்கான தேர்தலை வருகிற ஜூனில் நடத்தலாம் மாநில காங்கிரஸ் கட்சி கருத்துத் தெரிவிக்கிறது.

ஆளும் ஜனதாதள் கட்சியில் ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக சட்டசபையை ஜனாதிபதி கலைத்து விட்டதும் பின்னர் ஆளுநர் ஆட்சி கொண்டு வரப்பட்டதும் தெரிந்ததே (எ)

ஊழல் குற்றச்சாட்டுகள் பற்றி

# தூரதர்ஷனில்நேரடிவிவாதத்துக்கு தயாரா? பிரதமர் ராஜீவுக்கு ஹெக்டே சவால்!

புதுடில்லி, மே. 7

நேருக்கு நேர் டெலிவிஷனில் விவாதம் நடத்தத் தயாரா?

கர்நாடக முன்னாள் முதலமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டே பிரதமர் ராஜீவ் காந்திக்கு மேற்கண்டவாறு சவால் விடுத்திருக்கிறார்.

செய்தியாளர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் திரு. ஹெக்டே, அந்த நேர்முக விவாதத்தின் போது என் மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு நான் தக்க பதிலளிப்பேன். தன் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு சரியான பதிலளிக்க ராஜீவும் தயாராக இருக்கவேண்டும்—என்று சொன்னார்.

திரு. ஹெக்டே மேலும் சொன்னதாவது;

என் மீது பிரதமர் அடிக்கடி ஊழல் குற்றச்சாட்டை சுமத்திவருகிறார். இனியும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. பொறுமை இழந்து விட்டேன். (எ)

# சினிமாவில் நடிப்பதற்கு அரசின் அனுமதி தேவையில்லை

### முதலமைச்சர் ராமராவ் கூற்று

விஜயவாடா, மே 7

சினிமாவில் நடிக்க ஜனாதிபதி அனுமதியோ மத்திய அரசின் சம்மதமோ எனக்குத் தேவையில்லை.

இப்படி ஆந்திர மாநில முதலமைச்சர் என். ரி. ராமராவ் தெரிவித்தார்.

தெலுங்கு, ஹிந்தி மொழிகளில் ஒரேசமயத்தில் தயாரிக்கப்படும் 'விசுவாமித்திரர்' படத்தில் ராமராவ் நடிக்கிறார்.

'நான் பொதுமக்களுடைய பணத்தை விரயமாக்கவில்லை. மற்ற நாடுகளுக்கு ஊர்சுற்றிக் கொண்டிருக்கவில்லை'—என்று திரு. ராமராவ் மேலும்சொன்னார்.

விசுவாமித்திரர் படம் வருகிற விஜயதசமி தினத்தன்று வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. [எ]

# ரஷ்யாவிடம் இருந்து ஆயுதம்; ஈரான் வாங்கவுள்ளது

தெஹ்ரான், மே 7

சோவியத் யூனியனிடம் இருந்து அதிசக்தி வாய்ந்த குண்டு வீச்சு விமானங்களை ஈரான் வாங்க இருப்பதாக இர்னா செய்தி ஸ்தாபனம் நேற்று அறிவித்தது.

அடையாளம் சொல்லப்படாத நாடுகள் சிலவற்றிடமிருந்தும் ஆயுதங்களை வாங்குவதற்கான பேச்சுவார்த்தைகளை ஈரான் நடத்தி வருகின்றது.

ஆயுதங்களுக்கு ஒரு நாட்டில் மட்டுமே தங்கியிருக்க முடியாது. அதனால்தான் பல நாடுகளில் இருந்து வாங்க முயற்சிக்கிறோம்-

இப்படி பிரதி வெளியுறவு அமைச்சர் அலிமுகமதுபெஷாரத்தி சொன்னார் என்று தெஹ்ரான்டைம்ஸ்பத்திரிகை அறிவித்தது.

வளைகுடா யுத்தத்தின் போது ஈராக் நாட்டிற்கு சோவியத் யூனியன் ஆயுதங்களை வழங்கி வந்தது குறிப்பிடத்தக்கது (எ)

### பாக் - இந்தியப் பேச்சு மே 28 இல்

புதுடில்லி, மே 7

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான ஐந்தாவது சுற்றுப் பேச்சுக்கள் இஸ்லாமபாத்தில் இம் மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாகும்.

செயலாளர் மட்டத்தில் இப் பேச்சுக்கள் நடத்தப்படும்.

கடைசிச் சுற்றுப் பேச்சுக்கள் 1988 செப்டம்பரில் நடந்தன.

இரு நாடுகளுக்கு இடையேயான சியாசின் பனிமலைப் பிரதேசத் தகராறுக்குத் தீர்வு காணுவதே இச் சுற்றுப் பேச்சுக்களின் நோக்கமாகும். (எ)

### அ,தி.மு.கவில் மீண்டும் ஏன் சேர்ந்தேன்?

சென்னை, மே 7

மீண்டும் எம் ஜி. ஆர். அரசை தமிழகத்தில் ஏற்படுத்த வேண்டும்.

அதற்காகவே கசப்பு உணர்வுகளை மறந்து ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க. வில் சேர்ந்து கொண்டதாக முன்னாள் அமைச்சர் கே. காளிமுத்து தெரிவித்தார்.

பிரிந்து நிற்கும் ஏனைய அ. தி. மு. கவினரும் ஜெயலலிதா தலைமையின் கீழ் ஒன்றுபடவேண்டும் என்றும் திரு. காளிமுத்து கேட்டுக் கொண்டார். (எ)

### கடற்படைத் தளபதி

கொச்சின், மே 7

இந்தியாவின் தென் பிராந்தியக் கடற்படைத் தளபதியாக ரியர் அட்மிரல் ராஜ் பகதூர் சூரி பதவி ஏற்றிருக்கிறார்.

இதுவரை காலமும் இப்பதவியை வகித்து வந்த ரியர் அட்மிரல் பி. பி. சிவமணி அண்மையில் ஓய்வு பெற்றார். (எ)

### அகதிகள்மரணம்

வியட்னாம் அகதிகளை ஏற்றிக்கொண்டு வந்த படகு ஒன்றை கடற் கொள்ளைக்காரர்கள் தாக்கிய சம்பவத்தில் 130 அகதிகள் உயிரிழந்தனர்.

கடந்த மாதம் இந்தப் பயங்கரம் இடம்பெற்றது என்று இச் சம்பவத்தில் உயிர் தப்பி வந்த அகதி ஒருவர் நேற்று தெரிவித்தார். (எ)

---

# மாகாணசபையைக் கலைப்பதற்கு வீண் பழிகள் - குற்றச்சாட்டுக்கள்

### மேதினக் கூட்டத்தில் ஈ. பி. ஆர். எல். எப்.பிரமுகர் உரை

மட்டக்களப்பு, மே 8

வடக்கு — கிழக்கு மாகாண சபையைக் கலைப்பதற்கு ஸ்ரீலங்கா அரசுஎம்மீதுசில குற்றச்சாட்டுக்கள், வீண் பழிகளைச் சுமத்தப் பார்க்கிறது. திருமலைக் குண்டு வெடிப்புத் தொடர்பாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களும் இதில் அடங்கும்.

வடக்கு — கிழக்கு மாகாண மனிதவள இளைஞர் விவகார அமைச்சர் திரு. ஜோ. செனிவிரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

காந்திசிலைஅருகே மாகாண சபை உறுப்பினர் திரு. என். நேசராசா தலைமையில் கூட்டம் நடைபெற்றது. செனவிரத்ன மேலும் பேசுகையில் கூறியதாவது:

மாகாணசபை ஸ்ரீலங்கா அரசு போட்ட பிச்சைஅல்ல தமிழ்மக்கள் தம் வாழ்வை அர்ப்பணித்துப் பெற்றுக் கொண்டது அது.

இம்மாகாண சபையைக் கலைப்பதற்காக ஸ்ரீலங்கா அரசு சில குற்றச்சாட்டுகள், வீண்பழிகளைச் சுமத்தப் பார்க்கிறது.

திருமலை குண்டு வெடிப்புச் சம்பவத்தால் ஈ. பி. ஆர். எல். எவ். மீது குற்றம் சுமத்தி சேறுவீசப்பார்த்தார்கள்.

சிங்கள மக்கள் இச்சம்பவத்தில் காயமுற்று உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கையில் அம்மக்களின் வீரர்கள் கத்தி, பொல்லு சகிதம் சென்று தமிழ்மக்களைத் தாக்கினார்கள்.

காயமுற்று உயிருக்குப் போராடிய மக்களைப் பாதுகாக்க எவரும் முன்வரவில்லை. அந்த வீரர்களின் [illegible] தான் குண்டு [illegible] காத பல அப்பாவித் தமிழ் மக்களின் உயிர்களைப் பறித்தது.

அந்தத் தமிழ் மக்களைப் படுகொலைசெய்த கூட்டம்தான் ஈ. பி. ஆர். எல். எவ். மீது பழிசுமத்தியது. வீதியில் திரியும் எவரும் வாயில் வந்ததைக் கூறமுடியும். ஆனால் பொறுப்பு வாய்ந்த அமைச்சரொருவர் அப்படிக் கூறுவது நல்லதல்ல.

இலங்கை இந்திய ஒப்பந்தம் காரணமாக இந்தியாவின் தலையீடு இன்றி ஸ்ரீலங்கா அரசு எந்தவொரு திட்டத்தையும் அமுல்செய்ய முடியாது.

இப்படி அவர் கூறினார்.

ஈ. பி. ஆர். எல. எப் செயலதிபர் திரு. கே. பத்மநாபா பேசுகையில் ஸ்ரீலங்கா அரசு மாகாண சபையைக் கலைத்தல், அல்லது செயல்படுவதைத் தடுத்தல் போன்ற தமிழ் மக்களைப் பாதிக்கும் செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டால் தென்னிலங்கையில் உள்ள உழைக்கும் வர்க்கத்துடன் இணைந்து ஆட்சியைக் கவிழ்ப்போம்.

இதற்காக நாம் ஆயுதம் ஏந்திப் போராடவும் தயார். அப்படியான போராட்டம் நடைபெறுமானல் விரைவில் தமிழீழ குடியரசுவிழா கொண்டாடுவோம் என்றார்.

நிதி அமைச்சர் திரு. பி. பிரபாகரன் உரையாற்றுகையில் அன்று சிக்காக்கோ நகரில் தொழிலாளர் வர்க்கம் சிந்திய இரத்தத்தால்தான் 8 மணிநேரவேலை கொண்டுவரப்பட்டது.

இன்று வடக்கு — கிழக்கு மாகாணமக்கள் சிந்திய இரத்தம்தான் இம்மாகாண சபையை உருவாக்கியது.

இச்சபைமூலம் தமிழ் மக்க[illegible] காக்க நாம் [illegible]

ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டுச் சில தப்பான பிரசாரங்களை எமக்கெதிராகச் செய்கிறது.

ஸ்ரீலங்கா அரசு மாகாண சபையைக் கலைத்தால் அல்லது மாகாணசபையின் செயல்பாடுகளுக்கு முட்டுக்கட்டையாக இருந்தால் நாம் அதற்கெதிராகப் போராட்டம் நடத்துவோம்.

எமக்குரிய உரிமையைத் தரமறுத்தால் இந்தியாவிடம் கூறி அதனைப்பெற முயற்சி செய்வோம். இந்தியா உதாசீனம் செய்யுமானல் மீண்டும் நாம் காடு, மலைகளை நோக்கிச் செல்வோம். ஆயுத போராட்டம் தொடருவோம்.

இப்படி அவர் கூறினார்.

மற்றும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. சாம் தம்பிமுத்து, திரு. பிரின்ஸ் காசிநாதர், மாகாண சபை உறுப்பினர் திரு, ஞா. பத்மநாதன், பிரதி முதல்வர் எஸ். கணேசமூர்த்தி, ஈ. பி. ஆர். எல். எப். மாவட்டச் செயலாளர் திரு. அ. சிவஞானம், போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜனாப் அபூ யூசுப் ஆகியோரும் உரையாற்றினர். [இ21]

மக்கள் தொண்டர் படைக்கு

# ஸ்ரீலங்கா அரசு ஆயுதம்

யாழ்ப்பாணம் மே 7

இந்திய படையினரால் பயிற்சி வழங்கப்படும் மக்கள் தொண்டர் படையினருக்கான ஆயுதங்கள் ஸ்ரீலங்கா அரசினால் வழங்கப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக இந்த விநியோகம் மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதற்காக கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்ட ஆயுதங்கள் இந்திய படை உயரதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன.

சீன தயாரிப்பு எஸ் 84 ரக துப்பாக்கி 450, 90,000 ரவைகள் இதில் அடங்கும். [இ-2[illegible]]

# மலையகப் பகுதிகளில் நடந்த மேதினக் கூட்டங்கள்

நுவரெலியா, மே 8

அட்டனில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் மேதினக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் அட்டன் அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோவிலில் 'தொழிலாளர் தேசிய சங்கத்தின் பெயரில் விசேஷபூசை நடைபெற்றது.

பூசையில் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட இளைஞர்-மாதர் அணித்தலைவர்களும், ஏராளமான தொழிலாளர்களும் கலந்துகொண்டார்கள்.

பூசையைத்தொடர்ந்து அட்டன் நகரசபை மைதானத்தில் சங்கத்தின் தலைவர் திரு, ரி. ஐயாத்துரை தலைமையில் மேதினப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் திருவாளர் பி. பெருமாள், மத்திய மாகாண சபை உறுப்பினரும், சங்கத்தின் பொதுச்செயலாளருமான திரு. பி. வி. கந்தையா ஆகியோர் உட்படப் பலர் பேசினார்கள்.

### கொட்டகலையில்

நுவரெலியா, மே 8

மலையக மக்கள் முன்னணியின் முதலாவது எழுச்சிமிகு மேதினக் கூட்டம் கொட்டகலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது,

கூட்டத்திற்கு மலையக மக்கள் முன்னணியின் தலைவர் திரு. பெரியசாமி சந்திரசேகரன் தலைமைதாங்கினார். மலையக மக்கள் முன்னணியின் கிளைகளான மலையகத் தொழிலாளர் முன்னணி, மலையக இளைஞர் முன்னணி மலையக ஆசிரியர் முன்னணி ஆகியன இணைந்து இந்தமேதினக் கூட்டத்தை நடத்தின.

### ரதலையில்

ஈழவர் ஜனநயாக முன்னணியின் மேதினக் கூட்டம் நுவரெலியா ரதலையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

முன்னணியின் முக்கிய தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் உரையாற்றினார்கள்.

ஈரோஸ் ஸ்தாபகரும்,யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. ரட்ணசபாபதி, மட்டக்களப்பு ஈரோஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மஜீத், திரு. குணசீலன், கல்முனை ஈரோஸ் அரசியல் பிரிவு பொறுப்பாளர் ராஜேந்திரம் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

### மஸ்கெலியாவில்

இலங்கை தோட்டத்தொழிலாளர் செங்கொடிச் சங்கத்தின் மலையக ஐக்கிய மேதின விழா மஸ்கெலியாவில் நடைபெற்றது.

செங்கொடிச் சங்கத்தின் பொதுச் செயலாளரும், மத்திய மாகாண சபை உறுப்பினருமான திரு. ஓ. ஏ. இராசையா கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் இடதுசாரித் தலைவர்கள், வடக்கு - கிழக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் ஜனாப் அபூ யூசுப் உட்பட பலர் உரையாற்றினார்கள். (இ-58)

### பலத்த பாதுகாப்பு

கண்டி போகம்பறைச் சிறைச்சாலையைச் சுற்றி பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

கண்டி சந்தைக்கு முன்னால் வாகனங்கள் நிறுத்தப்படுவதை பொலீஸாரும் இராணுவத்தினரும் தடைசெய்தனர். (ஒ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நெல்லிக்காய்த்தைலம்
**(பிருங்க மலாதித்தைலம்)**

இத்தைலம் அனேக மருந்துகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இத்தைலம் சிரசில் தேய்த்துவந்தால் கண்எரிச்சல், கண் பார்வைக்குறைவு, கண்பூளை சாறல், கண்ணீர்வடிதல், தலைஇடி, தலைமயக்கம் போன்ற சிரசு ரோகங்களைக் குணப்படுத்தி முடியையும் வளரச் செய்யும்.

**¼ போத்தல் விலை 25/-**

கிடைக்கும் இடம்:
**க. செ. கைலாசம்பிள்ளை & சன்ஸ்**
76, பெரியகடை யாழ்ப்பாணம்.



# உதயன்

08 - 05 - 1989 திங்கட்கிழமை



## நன்னாரி சர்பத்

இது தேக குளிர்ச்சிக்கும் நரம்புத் தளர்ச்சிக்கும் மூல வருத்தத்துக்கும் சலக்கடுப்புக்கும் உஷ்ணச்சூட்டுக்கும் தாகசாந்திக்கும் பாவிக்கச் சிறந்தது.

**1 போத்தல் விலை 30/-**

வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

கிடைக்கும் இடம்:-
**க. செ. கைலாசம்பிள்ளை & சன்ஸ்.**
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.


## யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு அச்சகம்

யாழ்ப்பாணம், மே 8

யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு அச்சகம் ஒன்றை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

யாழ். மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்கள் உட்பட மற்றும் கூட்டுறவு அமைப்புக்கள் வருடா வருடம் ஏராளமான பணத்தை பத்திரங்கள் அச்சிடுவதற்கு செலவிடுகின்றன.

கூட்டுறவு அச்சகம் அமைப்பதன் மூலமாக கூட்டுறவுக் துறைக்கே அப்பணம் கிடைக்க வாய்ப்புண்டு என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஒ-3)

## ஷப்ரு, உதயன், அர்ச்சுனு வெற்றிக்கிண்ணங்களுக்காக உடற் பயிற்சிப் போட்டி

யாழ்ப்பாணம், மே 8

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான உடற் பயிற்சிப் போட்டி இம்முறை ''ஷப்ரு'', ''உதயன்'', ''அர்ச்சுனு'' வெற்றிக் கிண்ணங்களுக்காக நடைபெறுகின்றது.

கல்வி வட்டார ரீதியில் நடத்தப்பட்ட உடற்பயிற்சிப் போட்டிகளில் முதல் இடத்தைப் பெற்ற எழுபது அணிகள் இந்த இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளுகின்றன.

சுமார் 2 ஆயிரம் மாணவ, மாணவிகள் இறுதிப் போட்டியில் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 11-ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8-30 மணிமுதல் யாழ். கனகரத்னம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இறுதிப் போட்டிகள் நடைபெறும்.

யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி இறுதிப் போட்டி நிகழ்ச்சிகளின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

உடற்பயிற்சிப் போட்டிகள் 13, 17, 19 வயதுப் பிரிவுகளில் மாணவர்களுக்குத் தனியாகவும் மாணவிகளுக்குத் தனியாகவும் நடைபெறும் மேலும் ஆண். பெண் இருபிரிவுகளிலும் அணிநடைப் போட்டிகளும் தனியாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இப்போட்டியில் முதலாம், இரண்டாம் இடத்தைப் பெறும் அணிகளுக்கு 'ஷப்ரு' 'உதயன்', 'அர்ச்சுனு' சுற்று வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

இந்தப் போட்டிகளில் வெற்றிபெறும் அணிகள் எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வாரத்தில் மாகாண ரீதியில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ளும்.

யாழ். மாவட்ட போட்டிகளை உடற்பயிற்சி கல்வி அதிகாரி திரு த. அருணகிரிராஜா மேற்கொண்டு வருகிறார். (உ)

## சுடப்பட்டார்

கொழும்பு, மே 8

கண்டி மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் திரு. டி. எச். டீ. சில்வா இனந்தெரியாதோரால் வெள்ளிக்கிழமை மாலை சுடப்பட்டார்.

கண்டியில் உள்ள டென்னிஸ் மைதானம் ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றது.

திரு. சில்வாவைச் சுட்டபோது, அந்த மைதானத்தில் நின்றுகொண்டிருந்த சிறுமி ஒருத்தியும் காயமடைந்தார்.

[ஒ-எ]

## மயிலிட்டி..,

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழகத்துக்கு வேண்டிய தேவைகளின் மதிப்பீடுகளையும் பெற்றுக்கொள்வார்கள்.

'எமது வருகையின்நோக்கம் யாழ்ப்பாணத்திலுள்ள வைத்தியசாலைகளின் தேவைகளை நேரில் கண்டறிவதே. ஆகையால் யாழ். போதனா வைத்தியசாலையுடன் மயிலிட்டியில் உள்ள மார்பு நோய் வைத்திய நிலயத்தையும் மற்றும் சிறிய ஆஸ்பத்திரிகளையும் பார்வையிட இருக்கிறோம்' என்று அக்குழுவைச் சேர்ந்தவர்கள் எமது செய்தியாளருக்குத் தெரிவித்தனர்.

தூதுக்குழுவினர் யாழ்குடாநாட்டில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தங்கியிருப்பார்கள் என அறியவருகிறது.

(ச)

## தமிழ்ப் பகுதிகளில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யல் தீர்வுகாணும் வழி ஆராயப்படும்.

இப்போதைய பேச்சுக்கள் பல கட்டங்களாக இடம்பெறு ; காலஎல்லை ஏதும் இருக்காது.

பேச்சு முறிவடையும் என்று அவநம்பிக்கைகொள்ள வேண்டியது இல்லை.

இப்பேச்சுக்கள் இலங்கை—இந்திய ஒப்பந்தத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கை நிராகரிக்கப்பட்டுவிட்டது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு அப்பாலும் சென்று பேச்சுக்களை நடத்த ஜனாதிபதி பிரேமதாஸா உறுதி தந்துவிட்டார்.

ஆகவே ஒப்பந்தம் குறித்து அலட்டிக்கொள்ளாமல் தீர்வுக்கான பாதை குறித்து இலங்கை அரசுடன் பேசமுடியும்-இப்படி அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## மாறிவந்த சடலங்கள்!

கொழும்பு, மே 8

இத்தாலியர் ஒருவரின் சடலம் கொழும்பு வந்தது! யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரின் சடலம் இத்தாலியரின் வீட்டுக்குச் சென்றது!!

தெற்கு இத்தாலி நகரான லீஸ் [Leece] என்னுமிடத்தில் இத்தாலிப் பிரசையான கோட்டனோ கியான்கிரகொ என்பவரும் இலங்கைத் தமிழரான கனகரத்தினம் சுந்தரலிங்கம்என்பவரும்இறந்தனர்.

இவர்களின் சடலங்கள் லீஸ் மருந்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தன.

சடலங்களை உரியவர்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டன. ஆனால் இத்தாலியரின் மனைவிக்கு இலங்கையரான கனகரத்தினம் சுந்தரலிங்கம் என்பவரின் பிரேதம் கிடைத்தது.

இதனிடையில் 79 வயதான இத்தாலியரின் பிரேதம் பம்பாய் ஊடாக விமான மூலம் கொழும்பு வந்து சேர்ந்தது.

[அ-எ]

## தாக்குதல் முறியடிப்பு

கொழும்பு, மே 8

திருகோணமலை, மங்கிபிரிட்ஜ் என்னும் இடத்தில் இலங்கை இராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகக் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

[ஒ-எ]

## ஈரோஸ் உறுப்பினரை கூட்டிச் சென்றனர்

நேற்றுப் பிற்பகல் திருநெல்வேலியில் உள்ள 'ஈரோஸ்' அலுவலகத்தில் இருந்த நான்கு உறுப்பினர்கள் ஆயுதந்தாங்கிய சிலரால் கூட்டிச் செல்லப்பட்டனர்.

முக்கிய பிரமுகர் ஒருவர் திருநெல்வேலிப்பகுதிக்குநேற்றுச் சென்றிருந்தார் என்றும், அவ்வேளையிலேயே ஈரோஸ் உறுப்பினர்கள் கூட்டிச் செல்லப்பட்டனர் என்று தெரியவருகிறது,

ஈரோஸ் பிரமுகர்கள் பின்னர் சம்பந்தப்பட்டவர்களுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து விசாரணையின் பின் இவர்கள் விடுவிக்கப்படுவர் என உறுதியளிக்கப்பட்டிருந்தது.

(அ-9)

## வீரத்திலக,,

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வேற்றுப்பேசிய கேரள முன்னாள் ஆளுநர் ப. இராமச்சந்திரன் இலங்கையின் வடக்கு-கிழக்கு புனர் நிர்மாணத்தில் அமைதிப்படையினரின் சேவையை பாராட்டிப் பேசினார்.

விழாவில் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாவுபபாபு ராமமூர்த்தியும், இந்திய செஞ்சிலுவைச் சங்க சார்பில் திருமதி சரோஜினி வாழப்பாடிஆகியோரும் கலந்துகொண்டனர்.

(அ-9)

## கொழும்பில்.,.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள மகாநாட்டில் தீர்மானிக்க உள்ளோம்''-என்று யாழ். மாவட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி உதயனுக்குத் தெரிவித்தார்.

[அ-9]

## சிமெந்து விலை 19 ரூபாவால் இன்று முதல் அதிகரிப்பு

யாழ்ப்பாணம். மே 8

இன்று திங்கட்கிழமை முதல் சிமெந்தின் விலை 19 ரூபாவால் அதிகரிக்கப்படுகிறது.

கொழும்பில் இருந்து சனிக்கிழமை நண்பகல் கிடைத்த அறிவித்தலை அடுத்து காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம், லங்கா சிமெந்து நிறுவனம் ஆகியன ஒரு பைக்கட்டின் விலையை 115 ரூபா வாக அதிகரித்துள்ளன.

இதுகாலவரை 96 ரூபாவாக இருந்த ஆலை விலை இனி 115 ரூபாவாக உயர்த்தப்பட்டதால் மக்கள் பெரும் சஷ்டத்தை எதிர்நோக்க வேண்டி வரும் என்று வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேபோன்று புத்தளம் சிமெந்தின் விலை 115 ரூபாவாகவும் காலி சிமெந்தின் விலை 120 ரூபாவாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

எந்தவித கட்டுப்பாடுகளும் இன்றி எவரும் சிமெந்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

(சிமெந்து விலை அதிகரிக்கப்படலாம் என்று நேற்றைய உதயனில் செய்தி வெளியாகி இருந்தது. தெரிந்ததே.(ஒ-3)


## எமது புதிய வெளியீடுகள்

(1) ரகுவரன் ✱ ராதிகா
**இது உங்க குடும்பம் -** (ஒறிஜினல்)
(2) சிரஞ்சீவி ✱ பானுப்பிரியா
**மெட்ராஸ் ரவுடி**
(3) சத்தியஜித் ✱ ஆஷா
**குப்பத்துப் பொண்ணு**
(4) **புதுவெள்ளம் -** (ஒறிஜினல்)
(5) **ஒன்று பட்டால் உண்டு வாழ்வு**
(6) **WAR DOG -** (WAR)
(7) **THE COMMANDER -** (WAR)
(8) **FREEDOM FIGHTERS** (WAR)
(9) **SLAUGHTER HIGH** (HORROR)
(10) **PRINCE OF DARKNESS** (HORROR)
(11) **SAVAGE JUSTICE -** (WAR)
(12) **OPERATION WARZONE** (WAR)

**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665.

(C/2536)


## அறிவித்தல்

**இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்
வட பிராந்தியம்,
ஆனையிறவு.**

### கிடுகு விநியோகத்திற்கான ஒப்பந்தம் - 1989

புதிய பின்னப்பட்ட இரட்டைக்கிடுகு (6'x9'') விநியோகிப்பதற்கு சீல் வைக்கப்பட்ட ஒப்பந்தங்கள் 16 - 05 – 1989 மாலை 2 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. ஆனையிறவு உப்பளம் — 1,00,000 (ஒரு இலட்சம்)
2. குறிஞ்சாத்தீவு உப்பளம் — 50,000 (ஐம்பதினாயிரம்)

ஒப்பந்தப்படிவங்களை வடபிராந்திய முகாமையாளரிடமிருந்தும், விநியோக முகாமையாளர், இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம், 110, சேர் ஜேம் பீரிஸ் மாவத்தை, கொழும்பு-2 என்ற முகவரியில் இருந்தும் 15 - 05 - 1989 பி. ப 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். இதற்கு மீளளிக்கப்படாத பணமாக ரூபா 50/- செலுத்தப்பட வேண்டும். இரண்டு மாதத்திற்கு செல்லுபடியாகும் ரூபா 2000/- பெறுமதியான பிணை அல்லது கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட பணம் செலுத்தியதிற்குரிய பற்றுச்சீட்டு ஒப்பந்தத்துடன் இணைக்கப்படல்வேண்டும். இவ் ஆவணங்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செ. வேலாயுதபிள்ளை,**
பிராந்திய முகாமையாளர்.

வடபிராந்தியம்,
ஆனையிறவு.
1989 05-03

[C-2459]

## மரண அறிவித்தல்கள்

± J. M. J

### திருமதி மில்லி பத்மராணி வில்லியம்

திருமதி மில்லி பத்மராணி வில்லியம் காலமாகிவிட்டார் அன்னார், காலம்சென்ற போதகர் வில்லியத்தின் மனைவியும், ஜீவசெயன் ஜெயானந்தன் தயானந்தன் (தேவ ஊழியன் சீயோன் தேவாலயம் யாழ்ப்பாணம்) இவர்களின் அன்புத் தாயாருமாவார். அன்னாரின் அடக்க ஆராதனை 09-05-89 (செவ்வாய்) காலை 10.00 மணிக்கு உரும்பிராயிலுள்ள போதகர் தயானியின் இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்களும் விசுவாசிகளும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**போதகர் தயானி**
உரும்பிராய்.

(451)

### சி. சின்னத்துரை

ஈவினை புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த காலம்சென்ற சீனியர் தம்பதிகளின் புதல்வன் சின்னத்துரை 7.5 89இல் காலமாகிவிட்டார். இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், பாக்கியதேவி, இந்திராதேவி ஆகியோரின் அன்புத்தந்தையும், காலம் சென்ற ஆனந்தராசா (நெல்சந்தைப்படுத்தும் சபை) ஆகியோரின் மாமனாரும், தம்பையா (இளைப்பாறிய பாடசாலை அதிபர்) செல்லத்துரை, ஆகியோரின் சகோதரரும், ஞானுஷா, நிசாகர் (கனடா), வாசவன் (ஒஸ்ரேலியா) ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 11 மணியளவில் ஈவினை குடும்ப மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
**திருமதி பாக்கியதேவி, ஆனந்தராசா**

(C/2537)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கமலாம்பிகை இராசேந்திரன்

மானிப்பாய் உடுவில் வீதி 'சிவவில்லா' திருமதி கமலாம்பிகை இராசேந்திரன் 07-05-1989 இல் காலமானார்.

இவர் சிவக்கொழுந்து இராசேந்திரன் J. P. சட்டத்தரணியின் அன்பு மனைவியும் சிவஸ்காந்தா, திருமதி ஸ்கந்தலீலா அருணசலா, லீலமனோகரி, திருமதி ஹரிவசனி சரவணபவன், வசந்தசேனன் (சட்டத்தரணி), வசந்தகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. மா. அருணசலா, திரு. ம. சரவணபவன், திருமதி சொர்ணரூபினி சிவஸ்காந்தா, திருமதி பத்மினி வசந்தசேனன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற திரு. திருமதி இ. முருகேசம்பிள்ளை J. P. சட்டத்தரணி அவர்களின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற மு. சுப்பிரமணியம், மு, மதியாபரணம் (சட்டத்தரணி), திருமதி புவனேஸ்வரி சண்முகம், திருமதி நாகபூஷணி இராமேஸ்வரம், தற்போது கொழும்பில் வசிக்கும் மு. குகதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், முத்துக்குமாரசாமி சிவகுமாரன், திருமதி சுலோசனாதேவி கணேசன், திருமதி சகுந்தலாதேவி சத்தியநாதன், திருமதி பத்மினி சண்முகராசா, திருமதி இரஞ்சினி குகதாசன், திருமதி நிர்மலாதேவி தர்மத்துரை ஆகியோரின் சிறிய தாயாரும், மயூரன், செந்தூரன், கஜேந்திரன், கலாநந்தி, பிரபாநந்தி, தஷ்சினி, தனுஜா, துஷ்யந்தன், சிவாணி, காயத்திரி ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 08-05-1989 இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

தகவல்:
**சி. இராசேந்திரன்**

'சிவவில்லா',
உடுவில் வீதி,
மானிப்பாய்.

[10858]

### திரு. கதிரேசபிள்ளை பொன்னுச்சாமி

(இளைப்பாறிய ஓவசியர், நீர்ப்பாசன இலாகா)

திரு. கதிரேசபிள்ளை பொன்னுச்சாமி 06-05-1989 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சண்டிலிப்பாய் வாசியும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், தி. நிவேதிதாதேவி, க. மங்கையற்கரசி, ஆ. ஒப்பிலாம்பிகை, பொ. ஞானபண்டிதா, பொ. செகராஜசேகரம், பொ. ஸ்ரீவித்தியசாகரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை பகல் 12-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி கொட்டுப்பனை மயானத்தில் தகனம் செய்யப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**த. திருநாவுக்கரசு**

ஆலங்குழாய்,
சண்டிலிப்பாய் வடக்கு.

[382]

### திரு. து. கந்தசாமி ஆச்சாரி

(சிற்பக் கலைஞர்)

யாழ். வண்ணார்பண்ணை சிவன் கோயில் வடக்கு வீதி, திரு. து. கந்தசாமி ஆச்சாரி அவர்கள் 07 - 05 – 89 இல் காலமானார்.

இவர் காலம் சென்ற துரைசாமி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், கண்ணகியின் அன்புக் கணவரும், சேகர், மோகன், சண்முகம், அமுதினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 08-05-89 இன்று திங்கட்கிழமை பி ப 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சி. தெட்சணாமூர்த்தி.**

90, சிவன் கோயில் வடக்கு வீதி.
யாழ்ப்பாணம்.

[10859]

### திரு. ச. செல்லத்துரை

திரு. ச. செல்லத்துரை அவர்கள் 5.5.89 வெள்ளிக்கிழமை அன்று காலமாகிவிட்டார். தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், நாகரத்தினத்தின் அன்புத்துணைவரும், சிவா செல்லத்துரை [Hotel Intercontinental], சிவபாதசுந்தரம் [Liptons], சிவகுமாரனின் [Australia] அன்புத் தந்தையும் யோகரஞ்சனி, வானுமதி, அற்புதமலர் ஆகியோரின் அன்புமாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 8.5.89 மாலை 4.00 மணிக்கு 4/1, விவேகானந்தா அவெனியு, கொழும்பு - 6 இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சிவபாதசுந்தரம் (மகன்)**

4/1 விவேகானந்தா அவெனியு,
கொழும்பு - 6

[10857]


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 08—05—1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org